ஒன்றுகத் தொழுவோம்

விரிவாக்கப்பட்ட மறுபதிப்பு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஒன்றாகத் தொழுவோம்

Bishopstowe Chapel.

பள்ளிகளிலும், விடுதிகளிலும், குடும்பங்களிலும் உள்ளவர்களுக்கு உதவக்கூடிய ஜெபங்கள்

கிறிஸ்தீன் மெக்குயீன்

ஜாய் தங்கய்யா

1966-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம்

ஞானோதயா ஆதாரப் பயிற்சிப் பள்ளியின்

(செயின்ட் தாமஸ் மவுண்ட், மதராஸ்-16)
நாற்பதாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டபோது,
ஆண்டவருக்கு நன்றி செலுத்த
இந்நூல் வெளியிடப்பட்டது.

பள்ளிகளிலும், விடுதிகளிலும், குடும்பங்களிலும்
உள்ளவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்
என்ற நோக்கத்துடன்
இது சபைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
இதன் மூலமாக
எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணமுமான ஆண்டவரை

ஒன்றாகத் தொழுவோம்.

பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க இப்பொழுது
இந்த இரண்டாம் பதிப்பு
கடவுளின் மகிமைக்கென்று
அர்ப்பணிக்கப்படுகிறது.

முகவுரை

"ஒன்ருகத் தொழுவோம்" என்ற இந்த நூலில் காணப் படும் வழிபாட்டு முறைகளும், ஜெபங்களும் பலருக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் குடும்ப ஜெபங்களுக்கும், பள்ளியின் பொது ஜெபங்களுக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். இவைகளைத் தொகுத்தவர்களுக்கு என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

பலர் இச்சிறு நூலை வாங்கிப் பயன்படுத்திக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

லெஸ்லி நியுபிகின்,
சென்னைப் பேராயர்.

மறுபதிப்புக்கு முகவுரை

"ஒன்றாகத் தொழுவோம்" என்னும் சிறு நூல் பள்ளி களிலும் விடுதிகளிலும் பல்லாண்டு காலமாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. பயனடைந்தோர் பலர். வழி பாட்டு முறைகளையும் ஜெபங்களையும் இந்நாளையத் தேவைகளைக் கருத்தில் கொண்டு திருத்தியமைத்து தொகுத்தளிக்கும் செல்வி - கிறிஸ்டின் மெக்குயின் அவர் களும், திருமதி ஜாய் தங்கையா அவர்களும் பாராட்டுதற் குரியவர்கள். அவர்களின் ஜெபவாழ்க்கையின் சாரம் இந் நூல் - சிலுவை நாயகனின் மலரடிகளில் படைக்கப்படும் இந்நூல் இறைவனை முழு மனதோடும், முழுபெலத்தோடும் முழுஆத்துமாவோடும் தொழுதுகொள்ள உதவிடும் என்று நம்புகிறேன்.

ஜெ. ஜெயராஜ்
தலைமையாசிரியர்,
தூய பவுல் மேனிலைப்பள்ளி,
சென்னை-600 007.

இந்நூலை உபயோகிப்பவர்களுக்கு

நாம் ஒன்ருகத் தொழும்போது, கடவுள் உண்டு, அவர் நம்மைப் படைத்தவர், படைக்கப்பட்டவற்றிற்கெல்லாம் ஆண்டவர், நம்மேல் அன்புள்ளவர் என்று ஒப்புக் கொள்கிறோம். இப்படிப்பட்டவர் நம்மோடிருக்கிறார் என்பதை நினைவில் வைத்து, அவரைப்பற்றி தியானித்து, நம் அன்பையும் பக்தியையும் வெளியிடுவதே நாம் செய்யத் தகுதியானது. இது தான் **தொழுதல்.**

இவ்விதம் தொழும்போது, அவர் எதிர்பார்க்கும் அளவிலிருந்து எவ்வளவு குறைந்துள்ளோம் என்று உணர்ந்து நம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம். இதுதான் **பாவ அறிக்கை.**

அவர் கொடுத்துள்ள இரு பிரதான கற்பனைகளில், முதலாவது கற்பனையைப் பின்பற்றி அவர்மேல் நமக்குள்ள அன்பை வெளியிட்டபின் இவ்வுலகில் உள்ள பிறரையும் நேசிக்கவேண்டும் என்று உணருகிறோம். ஆகையால் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். அதே சமயத்தில் நமக்கும் அவர் உதவி செய்ய வேண்டுகிறோம். இதுதான் **மன்றாட்டு.**

குடும்பங்களிலும், விடுதிகளிலும், பள்ளிகளிலும் ஒன்ருக இருப்பவர்களோடு ஜெபித்தல் நல்லது. 'இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்' என்று கூறியுள்ளார். முழு மனதுடன் ஒன்றாக ஜெபிப்பது ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக் கூடியது.

சிலர் எவ்விதம் ஜெபிக்கலாம் என்று தெரியவில்லை என்கிறார்கள். சிலர், பலர் மத்தியில் உரக்க ஜெபிப்பதற்குக் கூச்சப்படுகிறார்கள். சிலர் குடும்ப ஜெபம் எவ்விதம் நடத்துவது என்று தெரியவில்லை என்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கும் ஜெபிப்பதற்கு உதவி அவசியம் என்று நினைப்பவர்களுக்கும் ஊக்கமும் உதவியும் அளிக்கவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

மறு மொழி: ஒரு தலைவரோடு பலர் ஜெபிக்கும்போது மனதை ஒருமுனைப்படுத்தி வைப்பது சிலருக்கு சிரமமாகத் தோன்றலாம். ஆகையால் எல்லாரும் பங்கெடுக்க வாய்ப்பளிப்பதற்காக 'எ' என்னும் பகுதி கொடுக்கப் பட்டுள்ளது.

வேத வாசிப்பு: படிப்படியாக வாசித்து, திருமறையின் எல்லா பாகங்களையும் ஆராய்ந்து முடிக்கத்தக்கதாக மறைவாசகப் பகுதி பட்டியலுக்கோ வேறு திட்டத்திற்கோ உட்பட்டதாக வேத வாசிப்பு இருக்க வேண்டும். திருமறையை விளங்கிக் கொள்ளவும், வாசித்து அறிந்து கொண்டதை நம் வாழ்க்கைக்கு ஏற்ற வழியாக அமைத்துக் கொள்ளவும் ஏற்றவையாக வேதாகம ஐக்கிய சங்கமும் வேறு கிறிஸ்தவ நிறுவனங்களும் வெளியிடும் தியானக் குறிப்புகள் பயன்படுத்துவதற்கு ஏற்றவை என்று பரிந்துரைக்கலாம்.

சங்கீதம்: குறிப்பிடப்பட்டுள்ள சங்கீதத்தைத் தலைவரும் மற்றவர்களும் மாறி மாறி வாசிக்கலாம். வாசித்து முடித்தபின் பின்வருமாறு முடிப்பது வழக்கமாகும்.

தலைவர்: பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

எல்லாரும்: ஆதியிலும், இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.

அமைதியாக இருத்தல்: இதைக்குறித்து அச்சம் தேவையில்லை. ஜெபங்களுக்கும் மன்றாட்டுகளுக்கும் இடையில் ....என்று போட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் வேண்டிக்கொண்டதைப்பற்றி நினைக்க நேரம் இருப்பது அவசியம். அவரவர் தேவைகளுக்காக மௌனமாக ஜெபிக்கவும் ஒவ்வொரு நாளும் வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

தலைவர் முன்னதாகவே ஆயத்தம் செய்ய வேண்டியது அவசியம்

அந்தந்த நாளுக்கான பகுதியை வாசித்து, அதற்கேற்ற வேதாகமப் பகுதியையும் பாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாள் 1

தலைவர்: அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள். கர்த்தருடைய, நாமத்தைத் துதியுங்கள்.

எல்லாரும்: இது முதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.

தலைவர்: சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசை மட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

(சங்கீதம் 113 : 1-3)

பாட்டு

சங்கீதம் 1

வேத வாசிப்பு

த. தேவனைத் தொழுவோமாக—எங்களையும், இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் படைத்தவரும், இந்நாள் வரை உம்முடைய திவ்விய சித்தத்திற்கேற்ப எங்களை வழிநடத்தினவருமாகிய பிதாவாகிய தேவனே,

எ. உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. பிதாவை எங்களுக்குக் காண்பிக்க இவ்வுலகிற்கு வந்தவரும், நித்திய ஜீவனுக்கான பாதையைத் திறந்தவருமான குமாரனாகிய தேவனே,

எ. உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. எங்கள் வழிகாட்டியும், எங்கள் பலமும், எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவருமாகிய பரிசுத்த ஆவியாகிய தேவனே,

எ. உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.
த. திரியேகராகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியே,
எ. உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. இன்று பின்வருபவைகளுக்காக வேண்டிக் கொள்வோமாக:

★ வாசிக்கப்பட்ட வேத பகுதியிலிருந்து ஏதாவது ஒரு தலைப்புக்காக அல்லது இன்றைய தினத்தின் தேவைக்காக..............

★ இன்று நாம் சந்திப்பவர்களுக்காக..........................

★ நாம் கடவுளின் மக்களாக வாழவேண்டும் என்பதற்காக.........................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவன் நம் உள்ளத்திலும் நம் நினைவுகளிலும் இருப்பாராக,
தேவன் நம் கண்களிலும் நம் பார்வையிலும் இருப்பாராக,
தேவன் நம் வாயிலும் நம் வார்த்தைகளிலும் இருப்பாராக,
தேவன் நம் இதயத்திலும் நம் எண்ணங்களிலும் இருப்பாராக,
தேவன் இப்பொழுதும் முடிவு பரியந்தமும் நம்மோடு இருப்பாராக.

த. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் கிருபையும், இரக்கமும், சமாதானமும் எப்பொழுதும் நம்மோடு இருப்பதாக.

ஆமென்.

நாள் 2

த. தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்,

எ. உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

த. என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி,

எ. என் பாவமற என்னைச் சுத்திகரியும்,

த. என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்;

எ. என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

சங்கீதம் 51 : 1-3

பாட்டு

சங்கீதம் 8

வேத வாசிப்பு

த. நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

நாம் சிறிது நேரம் அமைதியாய் இருந்து, நம் பாவங்களை நம் பரம பிதாவிடம் அறிக்கையிடுவோமாக. அவர் நமக்கு மன்னிப்பு அளிப்பதாக வாக்களித்திருக்கிறார்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

த. சர்வ வல்லமையும் இரக்கமுமுள்ள ஆண்டவர் நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து,

அவைகளினின்று நம்மை விடுதலையாக்கி, நம் வாழ்க்கையைச் சீர்ப்படுத்த சந்தர்ப்பமளித்து, பரிசுத்த ஆவியின் கிருபையையும் ஆறுதலையும் பூரணமாய் அருளுவாராக.

ஆமென்.

★ தேவனுடைய ஆசீர்வாதத்துக்காக வேண்டிக்கொள்வோமாக :

நம் வேலையிலும்.........
நம்மோடு தொடர்பு உள்ளவர்கள் மேலும்.........
நம் குடும்பங்கள், நமக்கு அன்பானவர்கள் மேலும்......
நம் வேண்டுதல் தேவைப்படுகிறவர்கள் மேலும்.........
தேவனுடைய ஆசீர்வாதம் இருப்பதாக.

ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. இன்று பின்வருபவைகளுக்காக வேண்டிக் கொள்வோமாக :

★ வாசிக்கப்பட்ட வேத பகுதியிலிருந்து ஏதாவது ஒரு தலைப்புக்காக........................

★ தாங்கள் பாவிகள் என்று உணராமல் இருப்பவர்களுக்காக.........................

எ. பிதாவே, இந்த நாளிலும் எல்லா நாட்களிலும் உம் அன்பின் பராமரிப்புக்கு எங்களை ஒப்புக் கொடுக்கிறோம்.

த. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நம் போக்கிலும் வரத்திலும், நம் பேச்சிலும் அமைதியிலும், நம் ஜெபத்திலும் வேலையிலும், இன்றும் என்றும் தம் ஆசீர்வாதத்தை அருளுவாராக.

ஆமென்.

நாள் 3

த. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மை வணங்குகிறோம்.

எ. உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை மகிமைப் படுத்துகிறோம். உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

பாட்டு

சங்கீதம் 15

வேத வாசிப்பு

த. நீர் பூரணராயிருப்பது போல உம்முடைய மக்களும் பூரணராயிருக்க வேண்டுமென்று விரும்பும் தேவனே, எங்களுக்கு வரும் தகாத சோதனைகளை மேற்கொள்ளவும், உம்முடைய அன்புக்குத் தகுந்த விதமாய் வாழவும் உதவி செய்ய வேண்டிக் கொள்ளுகிறோம். நாம் சோதிக்கப்படும்போது உதவியளிக்க வேண்டிக் கொள்வோமாக:

★ இரக்கமில்லாமல் பேசவும் குரூரமாகக் குறை கூறவும்...
★ பெருமைப்படவும், தன்னயமாயிருக்கவும்...........
★ பொறாமைப்படவும், கோபப்படவும்................
★ நம்மைப்பற்றியே பரிதாபப்படவும், சோம்பலாயிருக்கவும்...............
★ தவறாக அச்சமடையவும், தேவனை மறக்கவும் சோதிக்கப்படும்போது எங்களுக்கு உதவி செய்யும்.

எ. தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

ஆமென்.

த. தீமையான பாதைகளில் வழிநடத்தப்பட்டவர்களையும், சரியானவை எவையென்று அறியாதவர்களையும், சோதனைகளைக் கண்டுகொள்ள முடியாதபடி தங்கள் மனச்சாட்சியைக் கூர்மையற்றவையாக்கிக் கொண்டவர்களையும் ஆண்டவரே, உம்பாதுகாப்புக்கு ஒப்படைக்கிறோம். உம்முடைய பரிசுத்த ஆவி அவர்கள் இருதயங்களில் கிரியை செய்து, அவர்களை உம்மண்டை வழி நடத்தக் கிருபை செய்யும். ஆமென்.

இன்று பின் கூறப்பட்டுள்ளவர்களுக்காக வேண்டிக் கொள்வோமாக :

★ நம் சபையைச் சேர்ந்தவர்களுக்காகவும், நம் போதகருக்காகவும்..............

★ நம் சபையைச்சேர்ந்தவர்களில் ஏதாவது தேவையில் இருப்பவர்களுக்காகவும்..............

★ ஒழுங்காக ஆராதனைகளில் பங்கு பெறாதவர்களுக்காகவும், சபையின் ஐக்கியத்திலிருந்து விலகிவிட்டவர்களுக்காகவும்..............

★ இன்று வாசிக்கப்பட்ட வேதபகுதியில் குறிப்பிடப்பட்ட ஒருவருக்காக அல்லது ஏதாவது தேவைக்காக......

எ. ஆண்டவரே, எங்கள் மனங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றின் மூலமாய் நினைத்தருளும். எங்கள் உதடுகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின் மூலமாய்ப்பேசியருளும். எங்கள் இதயங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை உம் பரிசுத்த சித்தத்தின்படி செய்ய வேண்டுமென்ற வாஞ்சையால் கொழுந்து விட்டெரியச் செய்தருளும். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும். ஆமென்.

த. தேவனின் ஆசீர்வாதம் நம் அனைவரோடும்கூட இருப்பதாக. ஆமென்.

நாள் 4

த. தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக ; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

எ. பூமி தன் பலனைத்தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

த. தேவன் எங்களை ஆசீர்வதிப்பார் ; பூமியின் எல்லைகள் எல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

சங்கீதம் 67 : 5-7

பாட்டு

சங்கீதம் 19

வேத வாசிப்பு

த. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றித் தியானிப்போமாக.
அவரை உலகிற்குக் கொண்டுவந்த அளவிடப்படாத அவர் அன்பு,

எ. ஆண்டவரே, உம் அன்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. எப்பொழுதும் சேவை செய்ய ஆயத்தமாயிருக்கும் அவர் தாழ்மை,

எ. ஆண்டவரே, உம் தாழ்மையை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. எதிர்ப்புகளின் மத்தியிலும் தளராமலிருந்த அவர் விடாமுயற்சி

எ. ஆண்டவரே, உம் விடாமுயற்சியை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. துன்பங்கள் வந்தபோதும் உறுதியாயிருந்த அவர் தைரியம்,

எ. ஆண்டவரே, உம் தைரியத்தை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. மக்களைக் கடவுளிடம் வழிநடத்த முயன்ற அவர் பொறுமை,

எ. ஆண்டவரே, உம் பொறுமையை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. மரணத்திற்கு வழிநடத்தினபோதிலும் அவருக்கிருந்த கீழ்ப்படிதல்,

எ. ஆண்டவரே, உம் கீழ்ப்படிதலை எங்களுக்கு அருளிச் செய்யும்.

த. நேற்றும், இன்றும், என்றும் மாருத ஆண்டவராகிய உம் நாமத்தின் மூலம் இவற்றை வேண்டிக் கொள்கிரேம்.

ஆமென்.

எ. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, எங்களுக்காக நீர் சம்பாதித்துள்ள எல்லா நன்மைகளுக்காகவும், எங்களுக்காக நீர் பொறுத்துக் கொண்ட எல்லா துன்பங்கள், நிந்தைகளுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிரேம்.

மிகுந்த இரக்கமுள்ள இரட்சகரே, நண்பரே, சகோதரரே, நாங்கள் ஒவ்வொரு நாளும்,

இன்னும் தெளிவாக உம்மை அறிந்து கொள்வோமாக,

இன்னும் அதிகமாக உம்மை நேசிப்போமாக,

இன்னும் நெருங்கி உம்மைப் பின்பற்றுவோமாக.

ஆமென்.

த. இன்று பின் கூறப்படுகிறவர்களுக்காக வேண்டிக் கொள்வோமாக :

★ கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கிறவர்களுக்காக............

★ நற்செய்தியை அறிவிக்க வேறிடங்களுக்குச் செல்பவர்களுக்காக...........

★ வார்த்தையினுலும் செய்கையினுலும் சாட்சிகளாயிருக்கிறவர்களுக்காக...........................

★ கிறிஸ்துவைப்பற்றி அறியாதவர்களுக்காக.................

★ வாசிக்கப்பட்ட வேதபகுதியிலிருந்து ஏதாவது ஒரு தலைப்புக்காக.....................

த. ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

ஆண்டவரே, இன்று எங்களுடைய வேலைகளைத் தொடங்கும்போது எங்களை வழிநடத்தவும், காப்பாற்றவும், ஆற்றல் மிகுந்தவர்கள் ஆக்கவும் நீர் எப்போதும் எங்கள் கூடவே இருக்கிறீர் என்று உணரச்செய்யும். நாங்களும் எப்போதும் உமக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கச் செய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இந்த வேண்டுதலைக் கேட்டருளும்.

ஆமென்.

த. கர்த்தர் தாமே தம்முடைய பேரன்பைஅருளி, விலையேறப் பெற்ற தமது ஆசீர்வாதத்தைப் பொழிவாராக.

ஆமென்,

நாள் 5

த. உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

ஏ. எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

த. நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

ஏ. அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

பாட்டு

சங்கீதம் 23

வேத வாசிப்பு

த. தேவனே, உம்முடைய பரிசுத்த வசனத்துக்காக,

ஏ. உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. அதை எழுதுவதற்கு உம்மால் வழிநடத்தப்பட்டவர்களுக்காக,

ஏ. உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. அதைப்பல மொழிகளில் மொழிபெயர்த்தவர்களுக்காகவும், முக்கியமாகத் தமிழில் மொழிபெயர்த்தவர்களுக்காகவும்,

ஏ. உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. அதை ஆராய்ந்து படித்து, நாங்கள் விளங்கிக்கொள்ள உதவி செய்தவர்களுக்காக,

ஏ. உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. வேதாகம சங்கத்தின் வேலைக்காகவும், மேதாகவங்களைப் பகிர்ந்தளிப்பவர்களுக்காகவும்,

ஏ. உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. இன்று பின் வருபவைகளுக்காக வேண்டிக்கொள்வோமாக ;

வாசிக்கப்பட்ட வேதபகுதியிலிருந்து ஏதாவது ஒரு தலைப்புக்காக.................

இந்த நாளுக்காக..................

ஆண்டவரே, உம்முடைய திருவசனத்திலிருந்து எங்களோடு பேசியிருக்கிறீர்; உம்முடைய பரிசுத்த ஆவியினால் நாங்கள் சரியானவைகளை எண்ணத்தூண்டியிருக்கிறீர். நாங்கள் கற்றவைகளின்படி நடக்கத்தக்கதாக இந்த நாளில் எங்களோடு இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

சரியான பாதை எது என்று காட்டும் உம் சத்தத்தை அறிந்துகொள்ளவும், நாங்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுக்க உம் ஆற்றலுக்காக வேண்டிக்கொள்ளவும் எங்களுக்கு உதவிசெய்யும். இவ்விதம் நடப்பவர்களாய் இருந்தால் ஒவ்வொரு நாளும் உம் இராச்சியத்தின் வழிகளில் நடக்கிறவர்களாய் இருந்து, உம் ஆசீர்வாதங்கள் எங்களைச்சுற்றிலும் இருப்பதை உணர்வோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே இந்த வேண்டுதலை ஏறெடுக்கிறோம்.

ஆமென்.

எ. தேவனே, இந்த நாளிலும் எல்லா நாட்களிலும் எங்களை உம் அன்பின் கரங்களில் ஒப்படைக்கிறோம். நாங்கள் உம் வழி நடத்துதலுக்கு ஆயத்தமாயும், உம் ஊழியத்திற்குப் பயன்படுத்தக்கூடியவர்களாயும் இருப்போமாக. இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே எங்கள் வேண்டுதலை ஏற்றுக்கொள்ளும்.

ஆமென்.

த. நம் தேசத்தலைவர்களும், நாட்டுத்தலைவர்களும், அரசியல் தலைவர்களும், சபைகளின் தலைவர்களும் கடவுளின் ஞானத்தினால் வழிநடத்தப்பட வேண்டிக்கொள்வோமாக.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்குச் சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக.

ஆமென்.

நாள் 6

த. சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது.

எ. உன்னதமான கர்த்தரே, உமக்கு மகிமையுண்டாவதாக.

சங்கீதம் 24

த. தேவன் கொடுத்துள்ள கற்பனைகளை நினைவுகூருவோமாக: உன் தேவனாகிய கர்த்தர் நானே; என்னையன்றி உனக்குவேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

எ. கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

த. ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்.

எ. கர்த்தாவே ....ஏவியருளும்.

த. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

எ. கர்த்தாவே....................ஏவியருளும்.

த. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

எ. கர்த்தாவே.................... ஏவியருளும்.

த. உன்தகப்பனையும் உன்தாயையும் கனம்பண்ணுவாயாக.

எ. கர்த்தாவே....... ....ஏவியருளும்.

த. கொலை செய்யாதிருப்பாயாக.

எ. கர்த்தாவே....................ஏவியருளும்.

த. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

எ. கர்த்தாவே....................ஏவியருளும்.

த. களவு செய்யாதிருப்பாயாக.

எ. கர்த்தாவே.. .... ஏவியருளும்.

த. பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

எ. கர்த்தாவே ....ஏவியருளும்.

த. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

எ. கர்த்தாவே ....ஏவியருளும்.

பாட்டு

வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபகுதியில் கூறப்பட்ட போதனைகளை நம் நடத்தையில் காட்டுவதற்கான உதவிக்காக வேண்டிக்கொள்வோமாக.

எ. ஆண்டவரே, உம் வசனத்தைக்கேட்ட பின்னும் அதற்குக் கீழ்ப்படியாமல் இருப்பது மணல்மேல் வீடு கட்டுவதைப் போன்றதாகும் என்றும் அது எந்த நேரத்திலும் விழுந்துவிடும் என்றும் நீர் போதித்திருக்கிறீர். நீர் கூறியிருப்பதன்படி செயல்படுவதன் மூலம் எங்கள் வாழ்க்கையாகிய வீட்டை பலமான அஸ்திபாரத்தின் மேல் கட்ட உதவிசெய்தருளும்.

வேதம், சபை, குடும்பங்கள். பெரியவர்கள் மூலமும் உம்முடைய பரிசுத்த ஆவியின் மூலமும் எங்களுக்கு இவ்வளவு அறிவுரை கொடுத்துள்ளதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். எப்பொழுதும் எங்கள் வாழ்க்கை உமக்குப்பிரியமுள்ளதாயும், நாங்கள் உமக்கு மகிமை கொண்டு வருகிறவர்களாயும் இருக்கத் தக்கதாக நாங்கள் எப்போதும் உண்மையுள்ளவர்களாய் இருக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

உம் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

த. பின் கூறப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக :

வியாதியாய் இருப்பவர்கள் முக்கியமாக.................
எல்லா வைத்தியர்கள், உதவியாளர்கள்.................
தொழுநோய், காசம் போன்ற கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள்..............................

எ. தேவனே, இந்த நாளிலும் தொடர்ந்து எல்லாநாட்களிலும் எங்களோடு இருக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

த. தேவனுடைய ஆற்றல் நம்மை வழிநடத்துவதாக,
தேவனுடைய வல்லமை நம்மைக் காப்பாற்றுவதாக,
தேவனுடைய ஞானம் நமக்குப் போதிப்பதாக,
தேவனுடைய கரம் நம்மைப் பாதுகாப்பதாக,
தேவனுடைய வார்த்தை நமக்கு வழிகாட்டுவதாக,
தேவனுடைய கேடயம் இன்றும் என்றும் நம்மைப் பாதுகாப்பதாக.

ஆமென்.

நாள் 7

த. கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும்

எ. பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும், காலையிலே உமது கிருபையையும், இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.

த. கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்.

எ. உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.
சங்கீதம் 92: 1-4

பாட்டு

சங்கீதம் 27

வேத வாசிப்பு

த. கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன்?

உம்மை நம்புகிறவர்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ள சர்வவல்லமையும் அன்புமுள்ள தேவனே, எங்களுக்கு அச்சம் உண்டாகும்போது உம்மேல் எங்களுக்குள்ள நம்பிக்கை பலப்படவும், அனாவசியமான பயங்கள் அகற்றப்படவும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

மற்றவர்கள் என்ன சொல்வார்களோ அல்லது செய்வார்களோ என்ற பயம் எற்படும்போது,

எ. தேவனே, உம் பரிசுத்த ஆவியினாலே மேற்கொள்ள உதவிசெய்யும்.

த. மூட நம்பிக்கைகளினால் பயம் எற்படும்போது,

எ. தேவனே, உம் பரிசுத்த ஆவியினாலே மேற்கொள்ள உதவிசெய்யும்.

த. எதிர் காலத்தையும் புது நிலைகளையும் பற்றிய பயம் ஏற்படும்போது,

எ. தேவனே, உம் பரிசுத்த ஆவியினாலே மேற்கொள்ள உதவிசெய்யும்.

த. மரணத்தைப் பற்றிய பயம் ஏற்படும்போது,

ஏ. தேவனே, உம் பரிசுத்த ஆவியினாலே மேற்கொள்ள உதவிசெய்யும்.

பயத்தின் கட்டுகளிலிருந்து எங்களை விடுவிக்க வந்த இயேசு கிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். ஆமென்.

த. உம் அன்பை விட்டு யாதொன்றும் எங்களைப்பிரிக்க மாட்டாதென்று வாக்களித்துள்ள அன்பான ஆண்டவரே, எங்கள்மேல் உமக்குள்ள நம்பிக்கைக்கும் அன்புக்கும் விரோதமான காரியங்களைச் செய்வதற்கும், உம் வழிகளை விட்டு விலகிப் போவதற்கும் மட்டும் பயப்பட எங்களுக்குப் போதியும். உம் பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி உம் வல்லமை எங்களில் கிரியை செய்வதற்கு, எங்கள் வாழ்க்கை சாட்சியாயிருப்பதாக. ஆமென்.

இக்கட்டான நிலையில் இருப்பவர்களுக்காக வேண்டிக் கொள்வோமாக :

★ சிறையிலிருப்பவர்கள்.......................
★ அகதிகள்...............................
★ பிரிந்திருக்கும் குடும்பத்தினர்...................
★ சண்டையால் அவதியுற்ற நாடுகளில் இருப்பவர்கள்.......................
★ வாசிக்கப்பட்ட வேத பகுதியில் குறிப்பிடப்பட்ட யாராவது ஒருவர்.......................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

ஏ. ஆண்டவரே, இந்த நாள் முழுவதும் எங்களோடு இரும். வாழ்க்கைப் பாதையில் முன்னேறுவதிலும் உம் இராச்சியத்தை வளர்ப்பதிலும் இது இன்னும் ஒரு படியாய் இருப்பதாக. ஆமென்.

த. ஆண்டவர் எல்லா துர்க்கிரியையிலிருந்தும் விடுதலையளித்து, தம் பரம இராச்சியத்துக்கென்று நம்மைக் காப்பாற்றுவாராக. ஆமென்.

நாள் 8

த. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

எ. அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின், ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

சங்கீதம் 95 : 6-7

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 33

த. எங்களை உண்டாக்கின ஆண்டவரே, நாங்கள் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் எராளமான நன்மைகளுக்காக, இன்று உமக்கு நன்றி செலுத்துகிறோம். உலகிலே எங்களைச் சுற்றிலும் நாங்கள் காணும் அழகுக்காக,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. நாங்கள் சுவாசிக்கும் காற்றுக்காகவும், சூரியனுக்காகவும், மழைக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. எங்கள் குடும்பங்களுக்காகவும், எங்களை நேசிக்கும் எல்லாருக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. எங்கள் நாட்டுக்காகவும் அதில் பல பழக்க வழக்கங்கள், மொழிகள் உள்ளவர்களிடையே காணப்படும் ஒற்றுமைக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. நாங்கள் தொடர்ந்து கற்று வரும் உண்மைகளுக்காக,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. வழியும் சத்தியமும் ஜீவனுமான இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கைக்காகவும், மரணத்திற்காகவும் உயிர்த்தெழுதலுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

த. ஆண்டவரே, இந்த உம்முடைய எல்லா ஆசீர்வாதங்களுக்காக உம்முடைய கற்பனைகளின்படி நடப்பதன் மூலமும், உம் நாமத்தினாலே மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலமும் எங்கள் நன்றியைக்காட்ட எங்களுக்கு உதவிசெய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். ஆமென்.

கஷ்டம் துன்பத்தில் இருப்பவர்களைக் கடவுளின் சமுகத்தில் நினைவுகூருவோமாக:

நற்செய்தியை அறிவிக்கவும், மக்களுக்குத் துன்பங்களிலிருந்து விடுதலை அளிக்கவும் உம்முடைய குமாரனை அனுப்பின அன்பும் இரக்கமுமுள்ள தேவனே,

★ வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்கள்........................

★ கடினமான வேலைசெய்தும் அதற்கேற்ற ஊதியம் பெருதவர்கள்......................................

★ படிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் வேலையில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்........................

யாவருக்காகவும் வேண்டிக்கொள்கிறோம்.

தொழிற்சாலைகள், வேறு வேலை ஸ்தலங்களின் பொறுப்பு ஏற்றிருப்பவர்கள் வேலையாட்களை நீதி நியாயத்தோடு நடத்தவும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

வேலை செய்பவர்கள் சுகாதாரமான இடங்களில் போதிய ஊதியம் பெற்று வேலை செய்வதற்காகப் பாடுபடுகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

இந்த நாளுக்காகவும் இன்று வேதத்திலிருந்து கற்றுக்கொண்ட போதனைக்காகவும் நன்றி சொல்லுகிறோம்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. அன்புள்ள பரமதகப்பனே, இந்த நாளிலே எங்கள் மூலமாக உம் அன்பு பிரகாசிக்கத்தக்கதாக நாங்கள் வாழ உதவிசெய்ய வேண்டுமென்று உம் மகிமைக்காக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

த. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

நாள் 9

த. பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை.

எ. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

த. இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறி விழுவார்கள்.

எ. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து. கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

ஏசாயா 40: 28 - 31

சங்கீதம் 34

பாட்டு

வேத வாசிப்பு

த. எங்கள் ஆண்டவராகிய தேவனே, ஒளியும் ஜீவனும் அளிப்பவரே, நீர் அளித்துள்ள எல்லா நன்மைகளுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம்; உம்மை வணங்குகிறோம். நீரே எல்லா நன்மைகளையும் நாங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்க ஈந்தவர். உம் அன்பினாலும் இரக்கத்தினாலும் நீர் எங்கள் சாதாரண வாழ்க்கையை மாற்றியுள்ளீர். நீரே எங்கள் தந்தையும் எங்கள் கடவுளும் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர்.

நீர் எப்பொழுதும் எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர் என்ற எண்ணத்தோடு நாங்கள் வாழ உதவிசெய்ய வேண்டுமென்று தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம். நீர் எங்களை உம்முடைய பிள்ளைகளாக இருப்பதற்கும் உம்முடைய குடும்பத்தின் அங்கத்தினராய் இருப்பதற்கும் அழைத்திருக்கிறீர் என்பதற்கு எங்கள் வாழ்க்கை சாட்சியாய் இருப்பதாக. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

தேவையிலுள்ளவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக; சரீர சம்பந்தமான வசதிகள் குறைவாயுள்ளவர்களுக்காக,

எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

த. போதுமான அளவு உணவும் தங்கத் தகுந்த இடமும் இல்லாதவர்களுக்காக,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
த. சரீரநோய் மனநோய் உள்ளவர்களுக்காக,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
த. தங்களுக்கு அருமையானவர்களைக் குறித்தும் எதிர் காலத்தைக்குறித்தும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர் களுக்காக,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
த. தனித்து இருப்பவர்களுக்காகவும் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்திருப்பவர்களுக்காகவும்,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
ஆமென்.

த. வேலை இல்லாதவர்களுக்காகவும் வேலை செய்ய முடியாத வர்களுக்காகவும்,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
த. மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முயலுகிறவர் களுக்காகவும்,
எ. அன்புள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
த. நம் பெற்றோருக்காகவும் குடும்பத்தினருக்காகவும் ஜெபிப்போமாக...... ....
★ நமக்கு அருகில் இருப்பவர்களுக்காக ஜெபிப்போ மாக..... ....
★ இன்று நம்மோடு வேலை செய்பவர்களுக்காக ஜெபிப் போமாக ....
★ இன்று நம் உதவி தேவையான ஒருவரிடம் அனுப்புமாறு கடவுளை வேண்டிக் கொள்வோமாக... ....
★ இன்று வாசித்த வேதபாகத்தின் போதனையின்படி வாழ உதவிக்காக வேண்டிக் கொள்வோமாக.............

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. பரம பிதாவே, இந்த நாளில் நாங்கள் வேலைக்குச் செல்லும்போது எங்களோடு வாரும். எப்போதும் உமக்கு விருப்பமானவைகளையே செய்யவும், உம் முடைய அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் எங்களுக்கு உதவிசெய்யும். இயேசுகிறிஸ்து வின் மூலம் எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.
ஆமென்.

த. ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, நம் இருதயங்களை உண்மையும் அன்பும் சமாதானமுமான அவர் ஆவியால் நிரப்புவாராக.
ஆமென்.

த. கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

எ. துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

த. கர்த்தரே மகா தேவனும்,

எ. எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.

சங்கீதம் 95 : 1-3

த. கிருபை நிறைந்த கடவுளே, பல தடவைகள் உமக்கு ஏமாற்றம் அளிக்கும் எங்கள் மேல் கிருபையாயிரும். நீர் எங்களுக்கு அளித்துள்ள பரிசுத்த வேதத்திலே நாங்கள் வாழ்வதற்கு ஏற்ற வழியைக் காட்டியிருக்கிறீர். இயேசு கிறிஸ்துவின் மூலம் எங்களுக்கு முன்மாதிரி அளித்திருக்கிறீர். ஆகிலும் நாங்கள் எங்களுக்கு விருப்பமான வழியில் சென்று உமக்கும் உம் அன்புக்கும் விரோதமாகப் பாவம் செய்திருக்கிறோம். இரக்கமுள்ள தேவனே, பல தடவைகள் தவறி விடும் எங்கள்மேல் கிருபையாயிரும்.

உம் கற்பனைகளைக் கைக்கொள்ளாமற்போன தருணங்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

த. சுற்றிலும் உள்ளவர்களுக்கு அன்பு காட்டாத தருணங்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

த. மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்காக எங்களைச் சிறிதும் ஒடுக்க ஆயத்தமாயிராத தருணங்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

த. எங்களோடு இருப்பவர்களுக்குத் தொந்தரவு கொடுத்த தருணங்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

த. எங்களைத் துக்கப்படுத்தியவர்களை மன்னிக்கத் தவறிய தருணங்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

ஆமென்.

த. நம்மை வருத்தப்படுத்தி உள்ளவர்களுக்காக வேண்டிக் கொள்வோமாக......................

★ நாம் வருத்தப்படுத்தி உள்ளவர்களுக்காக வேண்டிக் கொள்வோமாக......................

★ நம் தேவைகளுக்காக வேண்டிக் கொள்வோமாக......

★ வாசிக்கப்பட்ட வேத பகுதியில் கண்டறிந்த தேவைக்காக வேண்டிக் கொள்வோமாக....................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளை உம்மோடும் உம் மகிமைக்காகவும் செலவிடத்தக்கதாக எங்களைப் பாதுகாத்து வழிநடத்தியருளும்.

ஆமென்.

த. இந்த நாளில் நாம் செய்யவேண்டிய கடமைகள் எவையென்று ஆண்டவருக்குத் தெரியும். நம் பெலனும் இரட்சகருமான அவர் நம்மை வழிநடத்தி, பலப்படுத்திக் காப்பாற்றுவாராக.

ஆமென்.

த. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும்.

ஏ. தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.

யோவான் 4 : 23-24

சங்கீதம் 40 : 1-11

பாட்டு

வேத வாசிப்பு

த. நமக்கு ஜீவனும் எல்லாமுமான பிதாவாகிய தேவனைத் தொழுவோமாக,

ஏ. அவரை வணங்க வாருங்கள்.

த. நாம் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்காக இவ்வுலகிற்கு வந்தவரும் வழியும் சத்தியமும் ஜீவனுமானவருமான இயேசுவைத் தொழுவோமாக,

ஏ. அவரை வணங்க வாருங்கள்.

த. பிதா, குமாரனோடு தொழுது ஸ்தோத்திரிக்கப்படு கிறவரும், ஆண்டவரும், ஜீவன் கொடுப்பவருமான பரிசுத்த ஆவியைத் தொழுவோமாக,

ஏ. அவரை வணங்க வாருங்கள்.

த. பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கு மகிமையுண்டாவதாக.

ஏ. ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதும் போல சதா காலங்களிலும் மகிமையுண்டாவதாக.

ஆமென்.

த. உம்முடைய பிள்ளைகளாக எங்களை அழைத்துள்ளவரும், எங்கள் வாழ்க்கையின் அனுபவங்களில் ஒருபோதும் உம்மை ஏமாற்றுமலிருக்க எங்களுக்கு உதவி அளிப்பவருமான பரம பிதாவாகிய தேவனே, உம் உதவிக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்.

களைப்பினால் இனிமேல் தொடர்ந்து வேலைசெய்ய முடியாது என்னும் நிலையிலிருக்கும்போது..................

கஷ்டமான வேலைசெய்ய அழைக்கப்பட்டு, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பும்போது..................

கெட்ட எண்ணத்துடன் பிறரைப்பற்றி வம்பு பேசவும், இரக்கமற்ற வார்த்தை சொல்லவும், செயல் செய்யவும் தூண்டப்படும்போது.................

நீர் எப்பொழுதும் எங்களோடு இருப்பேன் என்று வாக்குக்கொடுத்ததை மறந்து, எதிர்காலத்தைக் குறித்து பயம் அடையும்போது.................

எல்லா பக்கங்களிலிருந்தும் ஒன்றன்பின் ஒன்ருகத் துன்பங்கள் வருவதால், என்ன செய்யவென்று தெரியா மலிருக்கும்போது.................

எ. எங்களுக்கு உதவியருள மன்ருடுகிரேம்.

த. இன்று பின் வருபவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக :

★ எல்லா நாடுகளின் தலைவர்களுக்காகவும் முக்கியமாகப் போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகவும்.................

★ ஐக்கிய நாடுகளின் சபைக்காகவும் சமாதானத்துக்காக உழைப்பவர்களுக்காகவும் ....

★ பயங்கரவாதிகளுக்காகவும் சமாதானத்தைக் குலைப்பவர்களுக்காகவும்....... ....

★ இன்று வாசித்த வேதபகுதியிலிருந்து அறிந்து கொண்ட ஏதாவது ஒரு தலைப்பு அல்லது தேவைக்காக..............

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. உம்முடைய சீடரைப் பல, இடங்களுக்கும் அனுப்பினது போல இன்று எங்களையும் அனுப்பி, நாங்கள் எப்போதும் உமக்கு நன்றி கூறத்தக்கதாக முடிவுபரியந்தம் எங்களை வழிநடத்தியருளும்.

ஆமென்.

த. அன்பின் தேவன் பரிசுத்த ஆவியின் பலத்தினுலே எல்லாவித சந்தோஷத்தினுலும் சமாதானத்தினுலும் நம்மை நிரப்புவாராக.

ஆமென்.

நாள் 12

த. கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

எ. கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள்.

த. என்னோடே கூடக்கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்;

எ. நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

சங்கீதம் 34 : 1-3

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 46

த. இன்று வாசிக்கப்பட்ட வேதபகுதியோடு தொடர்புடைய தான ஜெபம்.

பொறுப்புள்ள பதவிவகிக்கும் எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்வோமாக: நம் ஜனாதிபதியும், பிரதம மந்திரியும், கவர்னரும், முதல் மந்திரியும் ஞானமும் விவேகமும் உள்ளவர்களாய் உழைக்க.

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. மந்திரிகளும், ராஜ்ய சபை, மாகாண சபை அங்கத்தினர்களும் மற்ற அதிகாரிகளும் தங்கள் கடமைகளைச்சரிவர நிறைவேற்ற,

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. ஆசிரியர்கள் தங்கள் வாழ்க்கையினாலும் வார்த்தைகளினாலும் தங்கள் மாணவர் உண்மையை அறியவும் நேசிக்கவும் பயிற்றுவிக்க,

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் மற்ற அலுவலகங்களிலும் அதிகாரம் வகிப்பவர்கள், தங்கள் விவகாரங்களில் உண்மையும், தங்களுக்குக்கீழ் வேலை செய்பவர்கள் மேல் இரக்கமும் உள்ளவர்களாய் இருக்க,

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. தங்கள் வார்த்தைகளினாலும் எழுத்தினாலும் மற்றவர்கள் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் கவர விரும்புகிறவர்கள், மக்களை உண்மையை அறியச் செய்கிறவர்களாய் இருக்க,

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. உலகம் எங்குமுள்ள உம் சபைகளின் தலைவர்கள், உம் மக்களைச் சரியான பாதையில் வழி நடத்த,

எ. எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

தேவனே, நீர் ஈவாகக் கொடுத்திருக்கும் இந்த நாளுக்காக நன்றி சொல்லுகிறோம். எங்கள் நன்றியை வார்த்தைகளால் மட்டும் தெரியப்படுத்தாமல் இதை உம் வழி நடத்துதலுக்கு ஏற்றவாறு உம் சமூகத்தில் செலவிடுவதன் மூலம் வெளிப்படுத்தக் கிருபை செய்யும். இந்த நாளில் நாங்களும், நாங்கள் சந்திக்கும் மற்றவர்களும் எங்கள் மூலம் உம் ஆசீர்வாதங்களைப் பெற உதவி செய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக்கேட்டருளும்.

ஆமென்.

த. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய சர்வ வல்லமையுள்ள தேவன் தாமே நம்மிலும், நம் வேலையிலும், அவர் நாமத்தில் செய்யப்படும் ஆராதனைகளிலும் தங்கியிருப்பாராக. அவர் நம்மை வழி நடத்த வெளிச்சமும், நம்மைத் தாங்க தைரியமும், நம்மை ஒற்றுமைப்படுத்த அன்பும் இப்பொழுதும் எப்பொழுதும் அருளுவாராக.

ஆமென்.

நாள் 13

த. இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்.
ஏ. இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.
த. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்;
ஏ. அவர் கிருபை என்றுமுள்ளது.

சங்கீதம் 118 : 24, 29

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 51 : 1-17

த. மக்கள் மத்தியில் வாழ்வதற்காக உம் மோட்ச மகிமையை விட்டு, எங்களுக்காக உம்மையே வெறுமையாக்கி, ஊழியக்காரனாக வந்த இயேசுகிறிஸ்துவே,
ஏ. நாங்கள் உம்மைத்துதித்து மகிமைப்படுத்துகிறோம்.
த. தேவனுடைய அளவில்லாத அன்பையும், அவர் எப்பொழுதும் மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருப்பதையும் எங்களுக்கு வெளிப்படுத்த வந்த இயேசுகிறிஸ்துவே,
ஏ. நாங்கள் உம்மைத்துதித்து மகிமைப்படுத்துகிறோம்.
த. எங்களைப் போல மானிட வாழ்க்கை வாழ்ந்து, எல்லா விதக் கஷ்டங்களையும் சோதனைகளையும் அறிந்துள்ள இயேசுகிறிஸ்துவே,
ஏ. நாங்கள் உம்மைத்துதித்து மகிமைப்படுத்துகிறோம்.
த. பிதாவின் சித்தத்துக்கு உம்மைப் பூரணமாய் ஒப்புக்கொடுத்து, அவர் நோக்கத்தை நிறைவேற்றின இயேசுகிறிஸ்துவே,
ஏ. நாங்கள் உம்மைத்துதித்து மகிமைப்படுத்துகிறோம்.
த. உம்முடைய பூரணமான அன்பின் காரணமாக, மனிதரால் கஷ்டம் அடைந்த இயேசுகிறிஸ்துவே,
ஏ. நாங்கள் உம்மைத்துதித்து மகிமைப்படுத்துகிறோம்.
த. மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, உயர்த்தப்பட்டு, எப்பொழுதும் உயிரோடிருப்பவராக எங்களுக்காக வேண்டுதல் செய்துகொண்டேயிருக்கும் இயேசுகிறிஸ்துவே,

எ. நாங்கள் உம்மைத் துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

த. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே, நாளுக்கு நாள் நாங்கள் உம்மைப்போல் வளர்ந்து, எங்களுக்காக நீர் கொண்டு உள்ள நோக்கத்தை நிறைவேற்றத் தக்கதாக உம்மைப்பற்றித் த்யானிக்கவும், உம்திட்டப்படி வளரவும் எங்களுக்கு உதவிசெய்தருளும். உமக்கே எல்லா மேன்மையும் மகிமையும் உண்டாவதாக.

ஆமென்.

பின் வருபவைகளுக்காக வேண்டிக்கொள்வோமாக:

★ இன்று வாசிக்கப்பட்ட வேத பாகத்தில் காணப்பட்ட ஏதாவது ஒரு குறிப்புக்காக....................

★ நமக்கு இருக்கும் ஏதாவது ஒரு பிரச்சனைக்காக............

★ எதிர்காலத்தைக்குறித்து நம்பிக்கையை இழக்கும் அளவுக்கு கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்காக, முக்கியமாக நமக்குத் தெரிந்தவர்களுக்காக..............

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவனே, இன்று உமக்கு மகிழ்ச்சி அளிப்பவர்களாக வாழ்வதற்கு உதவியாக உம் பரிசுத்த ஆவியால் எங்களை நிரப்பும். எங்களில் ஆவியின் கனிகள் வளரச் செய்தருளும். நாங்கள் எல்லா நிலைகளிலும் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்களாய் இருப்போமாக. அவரின் மூலமாய் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

த. நம் கண்களில் நம்பிக்கையின் ஒளியும், நம் உதடுகளில் ஊக்கத்தின் அனலும், நம் நாவுகளில் அவர் வார்த்தையும், நம் இருதயங்களில் அவர் அன்பும் உள்ளவர்களாய் வாழ, நம் ஒரே இரட்சகராகிய கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணியருளுவாராக.

ஆமென்.

நாள் 14

த. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

எ. துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்.

த. அவர் அவன் மேல் மனதுருகுவார்.

எ. நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.

ஏசாயா 55 : 6-7

த. தேவனே, நீர் எங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருந்து செய்யும் யாவற்றிற்காகவும் உம்மைத்துதித்து ஸ்தோத்திரிக்கிறோம். நீர் எங்கள் மானிட அறிவிற்கு எட்டாதவராயிருந்தும் உம்மை எங்களுக்கு வெளிப் படுத்த வழிவகைகளைத் தேடுகிறீர் என்பதை ஒப்புக் கொள்கிறோம். நீர் வானத்திலே எங்களுக்கு எட்டாத இடத்தில் இருந்தாலும் எங்கள் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலிருக்கிறீர். நீர் உலகை ஆளத்தக்க சர்வ வல்லமை யுள்ளவராயிருந்தும் எங்கள் வாழ்க்கையிலும் பங்கு கொள்கிறீர். எங்கள் எண்ணங்களையும் அறிவையும் விரி வாக்கி, உம்மைத் தொடர்ந்து எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

நற்செய்தியை இந்த நாட்டுக்குக் கொண்டு வந்தவர் களுக்காக,

எ. தேவனே, உம்மைத்துதித்து நன்றி கூறுகிறோம்.

த. உம்மை அறிந்துகொள்ள எங்களுக்கு உதவிசெய்த எல்லாருக்காகவும்,

எ. தேவனே, உம்மைத்துதித்து நன்றி கூறுகிறோம்.

த. எங்கள் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வேதாக மத்துக்காக,

எ. தேவனே, உம்மைத்துதித்து நன்றி கூறுகிறோம்.

த. எங்கள் வாழ்க்கையில் நீர் கிரியை செய்த எல்லா சந்தர்ப்பங்களுக்காகவும்.

எ. தேவனே, உம்மைத்துதித்து நன்றி கூறுகிறோம்.

த. உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தும் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கைக்காகவும், மரணத்துக்காகவும், உயிர்த்தெழுதலுக்காகவும்,

எ. தேவனே, உம்மைத்துதித்து நன்றி கூறுகிறோம்.

த. பின் வருபவைகளுக்காக வேண்டிக்கொள்வோமாக :

★ இன்று வாசித்த வேதபகுதியின் செய்திக்காக..............

★ இந்த நாளுக்காக................

★ அறுவை சிகிச்சையையோ, தேர்வையோ, நேர்முகத் தேர்வையோ எதிர் நோக்கியிருப்பதால் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்காக................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, நாங்கள் வாயினால் அறிக்கையிட்டவைகளை எங்கள் உள்ளத்தில் நம்பி, எங்கள் வாழ்க்கையில் செயல்படுத்த உதவிசெய்யும். உம் மிகுந்த கிருபையினால் முடிவு பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கச் செய்யும்.

ஆமென்.

த. சமாதானத்தோடே போங்கள் ; எல்லாவற்றிலும் தைரியமாயிருங்கள் ; நன்மையானவைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் ; யாருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள் ; சோர்வுற்றவர்களைப் பலப்படுத்துங்கள் ; பெலவீனமானவர்களைத் தாங்குங்கள் ; கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு உதவிசெய்யுங்கள் ; எல்லா மனிதரையும் கனப்படுத்துங்கள் ; பரிசுத்த ஆவியின் வல்லமையில் மகிழ்ந்து அன்புகூர்ந்து ஆண்டவருக்கு ஊழியம் செய்யுங்கள்.

ஆமென்.

த. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் ; பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.

எ. கர்த்தரைப்பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

த. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டு வந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

சங்கீதம் 96 : 1-2 ; 8-9

பாட்டு

சங்கீதம் 65

வேத வாசிப்பு

த. அல்லேலூயா கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர் ; அவர் கிருபை என்றுமுள்ளது.
இந்த நாளுக்காகவும் அதின் சந்தோஷங்களுக்காகவும் வாய்ப்புகளுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. எங்கள் குடும்பங்களுக்காகவும், உற்றார், உறவினர்களுக்காகவும், எங்களுக்காகக் கவலைப்படுகிறவர்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. ஒவ்வொருநாளும் எங்களுக்குக் கிடைக்கும் உணவு, பானத்துக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. எங்கள் உடல், ஆவி, ஆத்துமாவுக்கான எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. எங்களைச் சூழ்ந்திருக்கும் உம் அன்புக்காகவும் எங்களுக்கு ஊக்கம் அளிக்கும் உம் ஆவிக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. நீர் அருளிச்செய்துள்ள இந்த நன்மைகளுக்காகவும் எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம்.

ஆமென்.

ஜெபம் : இன்று வாசிக்கப்பட்ட வேதபகுதியிலுள்ள செய்தியோடு தொடர்புடையதான ஏதாவதொன்றைக் குறித்து ஜெபித்தல்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. கிறிஸ்துவே, நாங்கள் உம்முடைய நாமத்தைத் தரித்து உம்மைப் பின் செல்லுகிறவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கு ஏற்றவிதமாக நடக்க எங்களுக்கு உதவிசெய்யும். உம்மைத் துக்கப்படுத்துவதாக அல்லது மற்றவர்களுக்குத் தீங்கு இழைப்பதாக யாதொன்றையும் நாங்கள் செய்யாமல் இருப்போமாக. நாங்கள் உம்மிலும் மற்றவர்களிலும் அன்பு கூருவதைக் காட்டத்தக்கதாக உம் அன்பின் ஆவியால் எங்களை நிரப்பியருளும். உம் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

க. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதம் நம் அனைவரோடும் இருப்பதாக.

ஆமென்.

த. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

எ. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

சங்கீதம் 103 : 1-2

பாட்டு

சங்கீதம் 67

வேத வாசிப்பு

இன்று வாசித்த வேதபகுதியோடு தொடர்புடையதான ஜெபம்.

த. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளை நினைவு கூருவோமாக:
நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப்பலத்தோடும் அன்பு கூருவாயாக.

எ. கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

த. உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக.

எ. கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப்பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

த. எங்கள் அறிவுக்கும், நாங்கள் காட்டுவதற்கும் மேலான அன்புக்குப் பாத்திரராகிய ஆண்டவரே, உமதுமேலும் எங்களைச் சுற்றியுள்ளவர்கள் மேலும் அன்பு கூர வேண்டும் என்னும் உம் சித்தத்துக்குக் கீழ்ப்படியவும் உமக்காகச் செய்யும் ஒன்றையும் கடினமானது என்று

எண்ணுதபடியும் அதிகமான அன்பின் பிரவாகத்தால் எங்கள் இருதயங்களை நிரப்பும்படி வேண்டிக்கொள்கிறோம். நாங்கள் ஒவ்வொரு நாளும் அதிகமதிகமான அன்புள்ளவர்களாகி, அன்பே உருவானவரும் உம் அன்பின் நற்செய்தியை யாவரும் அறியவேண்டுமென்று விரும்புகிறவருமான உம்மைப்போல் விளங்குவோமாக. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

ந. பின் கூறப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக :

★ கடவுள் தங்களை நேசிக்கிறார் என்று அறியாதவர்கள்...
★ குடும்பத்திலாவது இந்த உலகத்திலாவது தங்களை நேசிப்பவர்கள் யாரும் இல்லாதவர்கள்..................
★ மனதை வெறுப்பினால் நிறைத்துள்ளவர்கள்..............
★ நம்பிக்கையையும் கூட்டுறவையும் அழித்து, பிரிவினையையும் அச்சத்தையும் உண்டுபண்ணுகிறவர்கள்.........
★ குறைவிலிருப்பவர்கள் மேல் அன்புகூர்ந்து, யாவரும் ஒத்துழைப்பதற்காகப் பாடுபடுகிறவர்கள்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவனே, இந்தப்புது நாளின் வாழ்க்கையிலும் வேலையிலும் எங்களோடு இரும். இன்று நாங்கள் நினைப்பவை பேசுபவை, செய்பவை யாவும் உமக்குப்பிரியமானவையாக இருப்பதாக. கிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

ந. எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்மோடே இருந்து, நாம் தேவனையும் அவர் குமாரனாகிய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி நம் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது.

ஆமென்.

நாள் 17

த. அல்லேலூயா,
எ. என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி.
த. நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்;
எ. நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங்கீதம் 146 : 1-2

த. ஆண்டவரே, நாங்கள் ஆவியின் கனிகளைக் கொடுத்து, உம்முடைய நாமத்துக்கு மகிமை கொண்டு வரும்படி உம்முடைய ஆவி எங்கள் இருதயங்களில் நிலைத்திருந்து ஆள வேண்டுமென்று, இன்று எங்களுக்காகவும் உம்முடைய பிள்ளைகள் எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்கிறோம்.

தேவனையும் நம்மைச் சுற்றி உள்ளவர்களையும் நேசிப்பதற்கான அன்பு,
எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.
த. எந்நிலையிலும் மகிழத்தக்கதான சந்தோஷம்,
எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.
த. எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அறிய உதவும் சமாதானம்,
எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.
த. சகிப்புத்தன்மையைத் தரக்கூடிய நீடிய பொறுமை,
எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.
த. மற்றவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கும் தயவு,
எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.
த. எப்பொழுதும் சரியானதையே செய்வதற்குத் தேவையான நற்குணம்,

எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச் செய்ய வேண்டுகிறோம்.

த. என்ன தொல்லைகள் வந்தாலும் விடா முயற்சியுடன் இருக்கும் விசுவாசம்,

எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச் செய்ய வேண்டுகிறோம்.

த. நினைவிலும் வார்த்தையிலும் செய்கையிலும் அடக்கமுடன் இருப்பதற்கான சாந்தம்,

எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம்.

த. எல்லாவற்றிலும் மிதமாகவே இருக்கும் இச்சையடக்கம்,

எ. இந்தக் கிருபையை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுகிறோம். ஆமென்.

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

பின் வருபவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக :

★ சிறையில் இருப்பவர்கள்...................
★ குடி, போதைப் பொருள் பழக்கத்தினால் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டவர்கள்.................
★ ஒழுக்கக் கேடான வாழ்க்கை வாழ்பவர்கள்..............
★ மேற்கூறப்பட்டவர்களாகத் தேவையில் இருப்பவர்களுக்கு உதவிசெய்ய உழைப்பவர்கள்...................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளிலே உம் ஆசீர்வாதங்களுக்காக நன்றியுள்ளவர்களாக வாழச்செய்யும். மற்றவர்கள் தேவைகளை உணரத்தக்கதாக எங்கள் கண்களையும் மனதையும் திறந்து வைத்திருக்க உதவிசெய்யும். இவைகளை உம் மகிமைக்காக உம் குமாரனின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

த. நம்மை உண்டாக்கி, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிற பிதாவாகிய தேவனுக்கும், நம்மேல் அன்புகூர்ந்து, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம் பாவங்களறக் கழுவின குமாரனுக்கும், நம் இருதயங்களில் தேவ அன்பைப் பொழியும் பரிசுத்தாவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

நாள் 18

த. கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்;

எ. காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

த. நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து,

எ. உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்வேன்.

சங்கீதம் 5 : 3-7

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 86 : 1-12

த. வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

எங்களுக்காகப் பிதாவினிடம் பரிந்துபேச எப்பொழுதும் உயிரோடிருக்கும் இயேசுகிறிஸ்துவே, இன்று மற்றவர்களுக்காகவும் எங்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறோம்.

பொறுப்பான பதவி வகிக்கும் யாவரும் மற்றவர்களுடைய நன்மைக்காக உழைக்க, அவர்களை நீர் வழி நடத்த வேண்டுமென்னும்

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. மனிதர்களுக்கிடையே, ஜாதிகளுக்கிடையே, நாடுகளுக்கிடையே சமாதானம் ஏற்படுத்தக்கூடும் கூட்டங்களில் ஒன்று சேருகிறவர்கள் நீதி மார்க்கத்தைப் பின்பற்றவும், ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவும் வேண்டுமென்னும்,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. எங்கள் குடும்பங்களைச் சமாதானத்தால் நிரப்பி, நீர் தங்கத்தக்க இடங்களாக ஆக்க அவற்றை ஆசீர்வதிக்க வேண்டுமென்னும்,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. சிறுவர் உண்மையானவைகளையும் நன்மையானவை களையும் அறியும் அறிவில் வளர, அவர்களை வளர்ப்பதில் பங்கு பெற்றிருப்பவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்னும்,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. சரீரத்திலும் மனதிலும் நோயுற்றவர்களோடும் உதவியற்றவர்களோடும் பலவீனரோடும் அவர்களைப் பராமரிப்பவர்களோடும் நீர் தங்கியிருக்கச் சித்தம் கொள்ள வேண்டுமென்னும்,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

த. எங்கள் வாழ்க்கையின் எல்லா அனுபவங்களிலும் உம் உதவியை உணர்ந்து நித்திய ஜீவனை அடைய ஏற்றவர்களாய்க் காணப்பட, எங்களையும் உம் மக்கள் எல்லாரையும் உம் பரிசுத்த ஆவியாகிய ஈவினால் ஐக்கப்படுத்த வேண்டுமென்னும்,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே. ஆமென்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

தேவனே, எங்களுக்கு உயிரையும் இந்தப் புது நாளையும் கொடுத்திருக்கிறீர். இந்த உலகில் உம் இராச்சியத்தை ஸ்திரப்படுத்தவும், எங்கள் வாழ்க்கையில் ஒரு படி முன்னேறிப் போகவும் நீர் எதிர்பார்க்கிற விதமாக வாழக்கிருபைசெய்யும். இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே உம்மை வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

த. ஆண்டவருடைய விருப்பப்படி நாம் பரிசுத்தம், சாந்தம், உண்மை, தரும சிந்தனை, கீழ்ப்படிதல் உள்ளவர்களாயும், அவருடைய மேன்மைக்கும் மகிமைக்கும் உதவக்கூடியவர்களாயும் ஆகும்வரை அவர் நமக்குப் போதித்து வழி நடத்தி, நம்மைப் பலப்படுத்தியருளுவாராக.

ஆமென்.

நாள் 19

த. அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள்.

எ. அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.

த. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக.

எ. அல்லேலூயா

சங்கீதம் 150 : 1, 2, 6

ஜெபம்

பாட்டு

வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.
நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சொன்ன சில சிறந்த சொற்களை நினைவுபடுத்திக்கொள்வோமாக: பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக் கடவன்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. ஒருவன் என்னைப்பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்பற்றக் கடவன்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும்.

த. நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

எ. ஆண்டவரே, சரியான பாதையில் நடக்க எங்களுக்கு உதவிசெய்யும். ஆமென்.

த. இன்றுபின் கூறப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக:

★ கஷ்டத்திலிருப்பவர்கள் குறிப்பாக நமக்குத் தெரிந்தவர்களான...... ....

★ தங்களுக்கான ஒரு தலைவரைத் தேடியலைந்தும் இன்னும் இயேசுவையும் அவர் போதனைகளையும் பற்றி அறியாதவர்கள்.....................

★ நாட்டின் தலைவர்கள், முக்கியமாகத் தமிழ் நாட்டின் தலைவர்கள்....................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. பரமபிதாவே, சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு முன்மாதிரியாக எங்களுக்கு இயேசுகிறிஸ்துவை அளித்தீர்; அவ்விதம் வாழ உதவியாகப் பரிசுத்த ஆவியை வாக்குப் பண்ணியிருக்கிறீர். ஒவ்வொரு நாளும் உமக்குப் பிரியமான காரியங்களையே செய்யவும் நீர் எங்களுக்கென்று வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றவும் கிருபை செய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

த. தேவனுடைய ஆசீர்வாதம் இன்றும் என்றும் நம்மோடிருப்பதாக. ஆமென்.

நாள் 20

த. ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.

எ. நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

த. கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார் ;

எ. அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

சங்கீதம் 145 : 1, 2, 3,

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 90

த. நம்முடைய அன்றாடக வேலையை ஆண்டவரின் சமுகத்தில் நினைவு கூருவோமாக :

★ நாளின் பெரும்பாகத்தில் நாம் செய்யும் வேலை...........

★ வீடுகளில் நாம் செய்யும் வேலை....................

★ ஆண்டவருக்காகவும் அவர் சபைக்காகவும் நாம் செய்யும் வேலை....................

★ நமக்கு அவர் கொடுத்திருக்கும் சிறப்பான வரம்........

தேவனே, நாங்கள் உம்மைத் தொழும்போதும் வேலை செய்யும்போதும் எப்பொழுதும் எங்கள் மேல் கண்ணோக்கமாயிருக்கிறீர் என்பதை மறந்து விடாமலிருக்க உதவிசெய்யும். நாங்கள் செய்வதையெல்லாம் எங்களாலான வரை சிறப்பாகச் செய்யவும், அது எங்கள் வேலை என்று உம்முடைய சமுகத்தில் ஒப்புக்கொள்ள வெட்கப்படாமலிருக்கவும் உதவிசெய்யும். மற்றவர்களை வஞ்சிக்கிற பாவத்திலிருந்தும், துன்பப்படுத்துகிற செய்கையிலிருந்தும் எங்களை விலக்கியருளும். நாங்கள் செய்யும் வேலையெல்லாம் உமக்கும் மற்றவர்களுக்கும் நாங்கள் செய்யும் ஊழியத்தின் ஒரு பாகமாயிருப்பதாக. இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

வயல்களில் வேலை செய்பவர்களுக்காகவும் மேய்ப்பர்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

த. தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் வேலை செய்பவர்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

த. தொழிலாளிகள், வியாபாரம் செய்பவர்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

த. நோய்களைக் குணமாக்கும் வேலையில் ஈடுபட்டவர்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

த. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வேலை செய்பவர்களுக்காக,

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

த. வேலை கிடைக்காதவர்களுக்காக.

எ. ஆண்டவரே, எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

ஆமென்.

த. இன்று வாசிக்கப்பட்ட வேதபகுதியை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளில் எங்களோடு இருந்தருளும். நாங்கள் உமக்கு விருப்பமானவைகளையே நினைக்கிறவர்களாயும், செய்கிறவர்களாயும் இருப்போமாக. நாங்கள் உண்மையையே பேசுகிறவர்களாய் இருப்போமாக. நாங்கள் சரியானவைகளையும் நல்லவைகளையும் செய்கிறவர்களாய் இருப்போமாக.
நாங்கள் நீர் எங்களுக்கென்று திட்டமிட்டிருக்கும் இடத்திற்கே செல்கிறவர்களாய் இருப்போமாக.
நாங்கள் நீர் எப்பொழுதும் எங்களோடு இருக்கிறீர் என்ற எண்ணமுடையவர்களாகவே இந்த நாளில் செயல்படுவோமாக.
எப்பொழுதும் எங்களோடு இருக்கும் எங்கள் இரட்சகர் நாமத்தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறோம்.

ஆமென்.

த. தேவன் நம்மோடும் நமக்கு அன்பானவர்களோடும் இருப்பாராக.

ஆமென்.

நாள் 21

த. கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.

எ. பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.

த. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறுர்.

எ. கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள் ; என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

சங்கீதம் 103 : 8, 11, 13,22.

சங்கீதம் 91

பாட்டு

வேத வாசிப்பு

வாசித்த வேதபகுதியை அடிப்படையாகக் கொண்ட ஜெபம் .

த. கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜனுமான சர்வவல்லமையுள்ள தேவனே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. உயிருள்ளவைகளையெல்லாம் சிருஷ்டித்துக் காப்பாற்றி வருபவரே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. பரம பிதாவானவரும் எல்லா ஜாதியினரையும் பிள்ளைகளாக அழைத்தவருமானவரே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. உம்மை நம்புகிறவர்களின் கோட்டையும் அடைக்கலமுமானவரே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. உம் அன்பான குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலம் உம்மை வெளிப்படுத்தினவரே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. தொடர்ந்து எங்கள்மேல் அன்புகூர்ந்து, எல்லா நன்மையான ஈவுகளையும் அளிப்பவரே,

எ. நாங்கள் உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம்.

த. உம்மையும் உம் அன்பின் நற்செய்தியையும் அறியாதவர்களை நினைப்பூட்டுகிறோம்..................

★ உம்மைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள்................

★ உம்மைப்பற்றிக் கேள்விப்பட்டும் புறக்கணித்துள்ளவர்கள்....................

★ உம்மைப்பற்றிக் கேள்விப்பட்டும் பொறுப்புகளைஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள்....................

★ சிறிதுகாலம் உம்மைப்பின்பற்றிப் பின் வாங்கிப்போனவர்கள்....................

உம் அன்பை இவர்கள் அறியவும், உம் சித்தப்படி இவர்களை உம்மண்டை நீர் இழுத்துக்கொள்ளவும் வேண்டுகிறோம். ஏதாவதொரு வழியில் எங்களை நீர் உபயோகிக்கச் சித்தமானால் அதைக் காட்டவும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

எ. ஆண்டவரே, இந்தப்புது நாளைத் தொடங்கும்போது நீர் எங்களை எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறீர் என்று உணர உதவி செய்ய வேண்டுமென்றும், எது சரியென்று காட்டவும், தவறானவைகளிலிருந்து எங்களை விலக்கிக் காக்கவும் உம் ஞானத்தை எங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்றும், நாங்கள் இன்று சந்திப்பவர்களுக்கு அன்புகாட்ட உம் அன்பு எங்கள் உள்ளங்களில் இருக்க உதவிசெய்ய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வுலகில் எவ்விதம் வாழவேண்டுமென்று எங்களுக்கு முன் மாதிரியை வைத்துப் போயிருக்கும் எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இந்த விண்ணப்பத்தை ஏறெடுக்கிறோம். ஆமென்.

நாள் 22

கு. கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.

ச. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாகத் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

கு. அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின் படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

ச. கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.

சங்கீதம் 145 : 17 - 20.

சங்கீதம் 95

பாட்டு

வேத வாசிப்பு

கு. நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் ;

சிறிது நேரம் அமைதியாயிருந்து நம் பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்வோமாக :

ச. நாங்கள் செய்த குற்றங்கள் மூலம் நினைவிலும் வார்த்தையிலும் கிரியையிலும் பாவம் செய்திருக்கிறோமென்று சர்வ வல்லமையுள்ள தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினிடம் அறிக்கையிடுகிறோம். வல்லமையுள்ள தேவனே, எங்களுக்கு இரங்கும். எங்கள் பாவங்களை மன்னித்து, எல்லா தீமையினின்றும் விடுவியும். எங்களைச் சகல நன்மையிலும் நிலைநிறுத்தி, ஸ்திரப்படுத்தி, நித்திய மகிமையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

கு. இரக்கமுள்ள ஆண்டவரே நாங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, அமைதியான மனதோடும், இயேசு கிறிஸ்துவின் ஆவியோடும் எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு மன்னிப்பும் சமாதானமும் அருளிச்செய்ய வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

இன்று வாசித்த வேதபகுதியை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

இரக்கமுள்ள ஆண்டவரே, நாங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, அமைதியான மனதோடும், இயேசு கிறிஸ்துவின் ஆவியோடும் எப்பொழுதும உமக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு மன்னிப்பும் சமாதானமும் அருளிச்செய்ய வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

ஆண்டவரே, எங்கள் ஆத்துமாக்களையும் சரீரங்களையும்,
எங்கள் தேவைகளையும் நம்பிக்கைகளையும்,
எங்கள் ஜீவனையும் வேலையையும்,
எங்கள் பெற்றோரையும் உறவினரையும்,
எங்கள் நண்பரையும் உடன் ஊழியரையும்,
எங்கள் நாட்டினரையும் உலகிலுள்ளவர்கள் யாவரையும்,
எ. இன்றும் என்றும் உம் பாதுகாப்புக்கு ஒப்படைக்கிறோம்.

ஆமென்.

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

★ நம் நாட்டுத்தலைவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக......... ....

★ நம் தமிழ்நாட்டுத்தலைவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக............. ....

★ நம் சபைகளின் தலைவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக ....

★ நம் பள்ளி, விடுதியின் தலைவருக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் வேண்டிக்கொள்வோமாக...................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மைப்பாதுகாக்க நம் அருகில் இருப்பாராக,
நமக்கு உயிர் அளிக்க நம்முள் இருப்பாராக,
நம்மைக்காக்க நம்மைச் சுற்றிலும் இருப்பாராக,
நம்மை வழிநடத்த நமக்குமுன் இருப்பாராக,
நம்மை ஆசீர்வதிக்க நமக்குமேல் இருப்பாராக.

ஆமென்.

நாள் 23

த. ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள் ;
எ. ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.
த. அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது ;
எ. கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது அல்லேலூயா,

சங்கீதம் 117 : 1,2

பாட்டு

சங்கீதம் 96

வேத வாசிப்பு

த. தேவனே, நீர் எங்கள் புத்திக்கு எட்டாதவரானாலும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வெளிப்படுத்தினவரே, உலகமெங்குமுள்ள உம் பிள்ளைகளோடும் உம்மை இடைவிடாமல் துதித்துக்கொண்டிருக்கும் வானசேனைகளோடும் நாங்களும் உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் உம் மகிமைக்குத்தக்கதாக உம்மை இன்னும் நன்றாக மேன்மைப்படுத்தவும், இன்னும் பயபக்தியோடு உமக்கு ஊழியம் செய்யவும், உம்மைப் பற்றிய இன்னும் தெளிவான அறிவைக் கொடுத்து, நீர் எங்களோடு கூட இருக்கிறீர் என்பதை உணரச் செய்யும் ; அமைதியற்ற எங்கள் ஆவியை அமைதியுறச் செய்யும் ; எங்கள் எண்ணங்கள் சிதறிப்போகாதபடி பாதுகாத்தருளும். எல்லா மேன்மையும் மகிமையும் உமக்கே உண்டாவதாக.

ஆமென்.

இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

தேவையிலிருப்பவர்களுக்காக ஆண்டவரை வேண்டிக் கொள்வோமாக :

★ உணவும் வீடும் தேவையானவர்களுக்காக................
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக

த. சுகம், பெலன் தேவையானவர்களுக்காக...............
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. நண்பர்கள் தேவையானவர்களுக்காக..................
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. உம் அன்பைப்பற்றிய அறிவு தேவையானவர்களுக்காக.......................
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. வேலை தேவையானவர்களுக்காக ....
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. தவறான வழிகளை விட்டு, நல்ல வழிகளில் செல்ல உதவி தேவையானவர்களுக்காக...................
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

ஆமென்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளின் வேலைகளைச் செய்யும்போது உம்முடைய அன்பாகிய பரிசுத்த ஆவி எங்களை நிரப்பி, எங்களை ஆட்கொள்ளச் செய்யும். அவ்விதம் நீர் செய்தால்தான் நாங்கள் உம்மையும், இன்று நாங்கள் சந்திப்பவர்களையும் நேசித்து, உம்முடைய பிள்ளைகளாக வாழ முடியும். இந்த விண்ணப்பத்தை உம் நாமத்தில் ஏறெடுக்கிறோம்.
ஆமென்.

த. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் மகிமைக்காகப் பரம பிதாவின் பிள்ளைகளுக்கே உரியதான துணிவு, மகிழ்ச்சி, அமைதியான மனம் ஆகிய கிருபைகளும் மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு உரியன ஆக்குவாராக.

ஆமென்.

த. கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது.

எ. துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

த. நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது.

எ. தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

சங்கீதம் 147 : 1, 5, 11

சங்கீதம் 98

பாட்டு

வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம் ஏறெடுத்தல்.
தேவனே, எங்களோடு நீர் பேசும் ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்காகவும், எங்களுக்கு உண்மையைப் போதிக்கும் ஒவ்வொரு வாய்ப்புக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. வேதாகமத்துக்காகவும் மற்ற நல்ல நூல்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. போதகர்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. நீர் கிரியை செய்வதைக் காண்பிக்கும் வாழ்க்கையின் எல்லா அனுபவங்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. நாங்கள் உண்மையை அறிந்துகொள்ள எங்களை வழி நடத்தக் கூடியதும், உண்மையின் ஆவியானதுமான உம் பரிசுத்த ஆவிக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. உம்மைத் தேடுகிறவர்கள் உம்மைக் கண்டடைவார்கள் என்னும் உம் வாக்குக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. வாழ்க்கையின் எல்லா அனுபவங்களுக்காகவும்,

எ. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

த. இவற்றின் மூலமாக நீர் எங்களுக்குச் சொல்லவிரும்பு வதை அறிந்துகொள்ள ஆயத்தமாயிருக்கவும், நாங்கள் கற்றுக்கொண்டவைகளை ஞாபகத்தில் வைக்கவும் உதவிசெய்யும். உம் வார்த்தையைத் தக்க விதமாய்ப் புரிந்துகொள்வதைத் தடுக்கும் எங்கள் பெருமை, பிடிவாதம், கவனமின்மை, அலையும் மனங்கள், தவறான எண்ணங்கள், புது உண்மைகளைப்பற்றிய பயம் முதலியவற்றை எங்களை விட்டு அகற்றும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம்.

ஆமென்.

நாங்கள் சோதிக்கப்படும்போது,

எ. பலப்படுத்தும் உம் வார்த்தையைக் கேட்கச் செய்யும்.

த. நாங்கள் அதைரியப்படும்போது,

எ. உற்சாகமளிக்கும் உம் வார்த்தையைக் கேட்கச் செய்யும்.

த. நாங்கள் பலவீனமாயிருக்கும்போது,

எ. வல்லமையுள்ள உம் வார்த்தையைக் கேட்கச்செய்யும்.

த. எங்கள் உள்ளம் புண்பட்டிருக்கும்போது,

எ. ஆறுதலான உம் வார்த்தையைக் கேட்கச்செய்யும்.

த. நாங்கள் என்ன செய்வதென்று அறியாமலிருக்கும் போது,

எ. வழிகாட்டும் உம் வார்த்தையைக் கேட்கச்செய்யும்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

த. தேவனே, இந்த நாளிலே உம் வழிநடத்துதலுக்கும் அன்புக்கும் எங்களை ஒப்புக்கொடுக்கிறோம். நாங்கள் எவ்விதமாகப் பேசவேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ அவ்விதமாகப் பேசவும்; நாங்கள் எவ்விதமாகச் செயல்படவேண்டுமென்று விரும்புகிறீரோ அவ்விதமாகச் செயல்படவும் உதவிசெய்யும். நாங்கள் எங்கள் வாழ்க்கையினால் உம்மை மகிமைப்படுத்துகிறவர்களாய் இருப்போமாக. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய கடவுள் நம்மோடிருப்பாராக.
ஆமென்.

நாள் 25

த. தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக

எ. கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்.

த. கர்த்தாவே ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

எ. எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்.

1 நாளாகமம் 29 : 10, 11, 13

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 100

த. எல்லா மனிதரையும் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிற ஆண்டவரே, ஒவ்வொரு தலைமுறையிலும் உமக்குச் சித்தமானவர்களை உம் ஊழியத்துக்கென்று அழைத்து, வழி நடத்தினவரே, உம்மை விசுவாசித்து, உம் உதவியைப் பெற்றிருந்த பழைய ஏற்பாட்டுத் தலைவர்களுக்காக,

எ. ஆண்டவரே, உம் நாமத்தைப் போற்றுகிறோம்,

த. உம் வார்த்தையைச் சரிவரப் புரிந்து கொண்டு, மற்றவர்களும் புரிந்து கொள்ள உதவிய தீர்க்கதரிசிகளுக்காக,

எ. ஆண்டவரே, உம் நாமத்தைப் போற்றுகிறோம்.

த. உம் அழைப்பை ஏற்றுக்கொண்டு, உமக்குச் சாட்சிகளாக வாழ்ந்த சீடர்களுக்காக,

எ. ஆண்டவரே, உம் நாமத்தைப் போற்றுகிறோம்.

த. உறுதியாய் நின்று தங்கள் விசுவாசத்துக்காகக் கஷ்டங்களை அனுபவிக்க ஆயத்தமாயிருந்த இரத்தசாட்சிகளுக்காக,

எ. ஆண்டவரே, உம் நாமத்தைப் போற்றுகிறோம்.

த. இந்நாட்டிலும் மற்ற நாடுகளிலும் உம் சபையைக் கட்டின எல்லாருக்காகவும்,

எ. ஆண்டவரே, உம் நாமத்தைப் போற்றுகிறோம்.

த. அவர்கள் முன்மாதிரியிலிருந்து சிறந்தவைகளைக் கற்றுக் கொள்ளவும், இக்காலத்திலும் உம் மக்களாக வாழவும், நாங்கள் பெற்றுள்ள சிறந்த பெயருக்குப் புகழ் கொண்டு வரவும், மற்றவர்கள் உம்மை ஏற்றுக்கொள்ள உபயோகிக்கப்படவும் எங்களுக்கு உதவி செய்ய இயேசுகிறிஸதுவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்

ஆமென்.

இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

த. பின் கூறப்படுகிறவர்களுக்காக விண்ணப்பம் செய்வோமாக:

★ இன்று ஏதாவது தொல்லையில் இருப்பவர்கள்...............
★ இன்று ஏதாவது ஆபத்தில் சிக்கி இருப்பவர்கள்..........
★ இன்று அறுவை சிகிச்சைக்காக ஆயத்தப்படுகிறவர்கள்
★ இன்று கடினமான சோதனைகளை எதிர்நோக்கியிருப்பவர்கள்..................
★ இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க ஆயத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்......................
★ இன்று நமக்குத் தெரிந்தவர்களாக ஏதாவது தேவையில் இருப்பவர்கள்......................

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவனே, ஞானம் தேவை என்று வேண்டிக் கொள்கிறவர்களுக்கு அதை அருளுவதாக நீர் வாக்களித்திருக்கிறீர், ஆகையால் இன்று நீர் விரும்புகிறபடி வாழ்வதற்கான ஞானத்திற்காகவும், சரியானது எது என்றும் தவறானது எது என்றும் அறிந்து கொள்வதற்கான ஞானத்திற்காகவும், இன்று நன்மையளிக்கும் வழியில் செல்வதற்கான ஞானத்திற்காகவும், எங்கள் நாவை அடக்கிவைப்பதற்கான ஞானத்திற்காகவும், எண்ணங்களின் மூலமாயும், வார்த்தைகளின் மூலமாயும், செய்கையின் மூலமாயும் உம்மையும் மற்றவர்களையும் நேசிப்பதற்கான ஞானத்திற்காகவும் வேண்டிக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஆமென்.

த. தேவனுடைய ஆசீர்வாதம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

நாள் 26

த. கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்;

ச. நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது.

த. ஆமென், எங்கள் தேவனுக்கு

ச. துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

வெளிப்படுத்தின விசேஷம் 4:11; 7:12

பாட்டு

வேதவாசிப்பு

சங்கீதம் 103

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

ச. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

த. இயேசு இந்த அன்பை எவ்விதம் காண்பித்தார் என்று ஞாபகப்படுத்திக்கொள்வோமாக.

பலவிதத் தேவைகளிலிருந்தவர்களுக்காகக் கவலைப் பட்டதன் மூலம் காண்பித்தார்.

ச. ஆண்டவரே, இவ்விதமான அன்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

த. தன்னலமற்ற ஊழியத்தின் மூலம் காண்பித்தார்.

ச. ஆண்டவரே, இவ்விதமான அன்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

த. உவமைகளின் மூலம் காண்பித்தார்.

ச. ஆண்டவரே, இவ்விதமான அன்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

த. மரணபரியந்தம் கீழ்ப்படிந்ததன் மூலம் காண்பித்தார்.

எ. ஆண்டவரே, இவ்விதமான அன்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

த. பரம பிதாவே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை எங்களுக்கு அருளிச்செய்து, உம்மேலும் பிறர்மேலும் எங்களுக்குள்ள அன்பை விருத்திசெய்யும்.

★ எங்களோடு இருப்பவர்கள், வேலைசெய்பவர்கள் மேலும்...................

★ கூட இருப்பதற்குக் கஷ்டமானவர்கள் மேலும்...........

★ எங்கள் பலவீனங்களைச் சகிக்கக் கஷ்டப்படுகிறவர்கள் மேலும்....................

★ எங்களைவிட வித்தியாசமான பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் மேலும்....................

★ எங்களுக்குக் கெடுதி செய்தவர்கள் மேலும்..............

★ எங்களுக்குத் தீமைசெய்ததால் நாங்கள் மன்னிக்க முடியாமல் இருப்பவர்கள் மேலும்....................

எங்களுக்குள்ள அன்பை அதிகப்படுத்தும்.

ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவனே, இந்த நாளின் வேலைகளைச் செய்யும்போது எங்களோடு இருந்தருளும். எங்கு சென்றாலும் உம் வெளிச்சத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்க உதவிசெய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இந்த விண்ணப்பத்தை ஏறெடுக்கிறோம்.

ஆமென்.

த. பரிசுத்த ஆவி நம்மை இரக்கமாய்க் கண்ணோக்கி, ஜெபத்திற்கு வழிநடத்தும் பரிசுத்தமான எண்ணங்களையும், அன்புக்கு வழிநடத்தும் ஜெபங்களையும், எப்பொழுதும் அவரோடிருக்கும் வாழ்க்கைக்கு வழிநடத்தும் அன்பையும் அருளுவாராக.

ஆமென்.

த. தேவனே, உம்மைத் துதிக்கிறோம் : உம்மைக் கர்த்த ரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

எ. நித்தியபிதாவாகிய உம்மை : பூமண்டலமெல்லாம் வணங்கும்.

த. தேவதூதர் அனைவோரும், பரமண்டலங்களும், அவை களிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும் :

எ. கிறிஸ்துவே, தேவரீர் மகிமையின் ராஜா : நீரே பிதாவி னுடைய நித்திய சுதன்.

திருச்சபையின் கீதம் 1, 2, 3, 10

பாட்டு

சங்கீதம் 104 : 1 - 24

வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்
எங்கள் ஜீவனுக்காகவும் வாழ்க்கையின் எல்லா இன்பங்களுக்காகவும்,

எ. உமக்கு நன்றி கூறுகிறோம்.

த. எங்களுக்கு அளித்திருக்கும் சுகத்திற்காக உமக்கு நன்றி கூறுகிறோம்.

எ. உம் பரிசுத்த ஆவியின் ஆலயங்களாகிய எங்கள் சரீரங் களுக்குக் கெடுதி புரியும் எக்காரியத்தையும் நாங்கள் செய்யாமலிருக்க உதவிசெய்யும்.

த. நல்ல கைகள், கால்களுக்காக உமக்கு நன்றி கூறு கிறோம்.

எ. மற்றவர்களுக்குச் சேவை செய்ய அவைகளை உப யோகிக்க உதவிசெய்யும்.

த. எங்கள் கண்களுக்காகவும் பார்வைக்காகவும் நன்றி கூறுகிறோம்.

எ. நாங்கள் எப்பொழுதும் உலகிலுள்ள அழகையே பார்க்க உதவிசெய்யும்.

த. எங்கள் காதுகளுக்காகவும் நாங்கள் கேட்பவைக்காக வும் நன்றி கூறுகிறோம்.

எ. மற்றவர்களின் தேவைகளைக் கேட்டு அறிய அனுதாப முள்ளவர்களாயிருக்க உதவிசெய்யும்.

த. எங்கள் உதடுகளுக்காகவும் பேசும் திறமைக்காகவும் நன்றி கூறுகிறோம்.

எ. அன்பினால் உண்மையையே பேசவும் உமக்குச்சாட்சி கூறவும் மட்டுமே அவைகளை உபயோகிக்க உதவி செய்யும்.

த. எங்கள் மூளைக்காகவும் நினைக்கும் சக்திக்காகவும் நன்றி கூறுகிறோம்.

எ. உண்மையை அதிகமதிகமாய் அறிய அதை உபயோகிக்க உதவிசெய்யும்.

த நித்திய காலமாய் வாழப்போகும் எங்கள் ஆத்துமாவுக்காக நன்றி கூறுகிறோம்

எ. வரப்போகும் வாழ்க்கைக்கு ஆயத்தமாக இந்த வாழ்க்கையிலேயே அதைப்பயிற்றுவிக்க உதவிசெய்யும்.

த. நீர் எங்களுக்குச் சிறந்த வரங்களைக் கொடுத்திருக்கையில் அவைகள் இல்லாதவர்களுக்காக ஜெபிக்கிறோம் :

★ வியாதியாய் இருப்பவர்கள்.......................

★ நொண்டிகள்...

★ குருடர் ....

★ செவிட்டு ஊமையர்.................................

★ மூளைக்கோளாறு உள்ளவர்கள்................

★ ஆத்தும வாழ்க்கையையும் வளர்ச்சியையும் குறித்துக் கவலையற்றிருப்பவர்கள் முதலியவர்களுக்காக..........

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. எங்கள் தேவனாகிய கர்த்தரே,
எங்கள் மனதில் தீய எண்ணங்கள் தோன்றாமல் இருக்கவும்,
எங்கள் வாயிலிருந்து உண்மையானவையும் பயனுள்ளவையுமான சொற்களே வெளிவரவும்,
நாங்கள் உம் அடியார்களாக எப்பொழுதும்
உமக்கு விருப்பமானவைகளையே செய்து வரவும்
அன்பும், ஆற்றலும் நிறைந்த உம் பரிசுத்த ஆவி எங்களை ஆட்கொண்டு நடத்துவதாக.
இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

த. சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

ஆமென்.

நாள் 28

கு. கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்.

எ. அவரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணி அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.

கு. அவருடைய பரிசுத்த நாமத்தைக்குறித்து மேன்மை பாராட்டுங்கள், கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக

எ. கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.

1 நாளாகமம் 16 : 8-11

பாட்டு

வேத வாசிப்பு

சங்கீதம் 111

கு. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். ஆண்டவரே, உம்மைத் தகுந்த விதமாய் அறிந்து, சரியானபடி தொழுதுகொள்ள எங்கள் இருதயங்களை உயர்த்தியருளும். எங்களைப்படைத்து நேசிக்கும் பிதாவாகவும், எங்களை மீட்டுள்ள குமாரனுகவும், எங்களைப் பரிசுத்தப்படுத்தும் பரிசுத்த ஆவியாகவும் உம்மை உணரச்செய்யும். எங்கள் எண்ணங்களை விரிவாக்கி, நீர் மனித ஞானத்துக்கு எட்டாதவரென்றும், ஞானத்துக்கு ஆரம்பமான பயத்துக்கு நீர் ஒருவரே உரியவரென்றும் அறியத்தக்க தாழ்மை உள்ளவர்களாய் இருக்கச்செய்யும். இவ்வுலகில் வாழத் தேவையானதும், நீர் எப்பொழுதும் தொழுது ஸ்தோத்திரிக்கப்படும் நித்திய வாழ்வுக்கு வழிநடத்துவதுமான ஞானத்தில் நாங்கள் வளரக்கிருபையளிக்க இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஆமென்.

ஞானத்தைத்தேடும் எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்வோமாக: கடவுளைப்பற்றி ஞானம் தேடுபவர்கள், வழியும் சத்தியமும் ஜீவனுமான அவரைக் கண்டுகொள்வார்களாக,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் கர்த்தாவே.

த. கல்வியின் மூலமாக ஞானம் தேடுபவர்கள் உண்மையான கருத்துக்களை அறிய ஆர்வமுள்ளவர்களாய் அவற்றையே கண்டுபிடிப்பார்களாக,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் கர்த்தாவே.

த. விஞ்ஞானத்தின் மூலமாக ஞானம் தேடுபவர்கள், தாங்கள் புதிதாகக் கண்டுபிடிப்பவைகளை மக்களின் நன்மைக்காகவே உபயோகிப்பார்களாக,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் கர்த்தாவே.

த. வீடுகளிலும், நாட்டிலும், நாடுகளுக்கிடையேயும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஞானம் தேடுபவர்கள் உம்மால் வழி நடத்தப்படுவார்களாக,

எ. எங்கள் வேண்டுதலைக் கேட்டருளும் கர்த்தாவே.

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

★ கடவுளின் உதவியும் ஆசீர்வாதமும் நம் பெற்றோருக்கும்.....................

★ நம் சகோதரர் சகோதரிகளுக்கும்.....................

★ நம் அருகில் இருப்பவர்களுக்கும்.....................

நம் விடுதியிலும் / வகுப்பிலும் / வேலைசெய்யும் இடத்திலும் (பொருத்தமானதை மட்டுமே குறிப்பிடவும்) இருப்பவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்வோமாக.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளில் எங்களைப்பற்றி மட்டுமே நினைத்து, தன்னயமாயிராமலும்,

விளைவுகளைக் குறித்து நினையாமல் கவனமின்றி, செயல்களில் ஈடுபடாமலும்,

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களை உம்குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஆக்கியிருப்பதை மறந்து நன்றி இல்லாதவர்களாய் இராமலும் எங்களைப் பாதுகாத்தருளும்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

த. சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

நாள் 29

த. அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள் ;
எ. அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.
த. கர்த்தருடைய வல்லமையான செயல்களைச் சொல்லி, அவருடைய துதியையெல்லாம் பிரஸ்தாபப் படுத்தத் தக்கவன் யார் ?
எ. நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள்.

சங்கீதம் 106 : 1 - 3

சங்கீதம் 121

பாட்டு

வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.

உண்மையான மகிழ்ச்சியின் அம்சங்களாக இயேசு கூறியவை :

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்,

எ. பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
த. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் ஆறுதல் அடைவார்கள்.
த. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.
த. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் திருப்தியடைவார்கள்.
த. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
த. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
த. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்,
எ. அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
த. நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்,
எ. பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

த. சர்வவல்லமையுள்ள தேவனே, உம் வார்த்தைகளைப் பூரணமாய் விளங்கிக்கொள்ள எங்களுக்குப் போதித்து, அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள எங்கள் சித்தங்களைப் பலப்படுத்தும். நாங்கள் உம் வசனங்களைக் கேட்கிற வர்களாய் மட்டும் இராமல் அவற்றின்படி செய்கிறவர் களாயும், நீர் எங்களுக்குச் செய்துள்ள எல்லாவற்றிற் காகவும் நன்றியுள்ளவர்களாயும் இருப்போமாக.

ஆமென்.

பின் கூறப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக :

★ தீய நண்பர்களால் தவறான பாதையில் வழி நடத்தப் பட்டவர்களுக்காக........................

★ குடிப்பழக்கத்திற்கும் போதைப்பொருள் உபயோகிப் பதற்கும் அடிமையாகி விட்டவர்களுக்காக..................

★ சூதாடும் பழக்கமும் ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவு செய்யும் பழக்கமும் உள்ளவர்களுக்காக........

இவர்களுக்கு ம் சரியான பாதையில் செல்ல முயலும் மற்றவர்களுக்கும் உதவி செய்ய பிரயாசப் படுகிறவர் களுக்காகவும் வேண்டிக் கொள்வோமாக.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. ஆண்டவரே, இந்த நாளுக்காக உமக்கு நன்றி கூறு கிறோம். உம்முடைய மகிமைக்காகவும் வாழ்க்கையாகிய யாத்திரையில் முன்னேறிச் செல்லும் படியாகவும் இதைச் செலவிட உதவிசெய்யும். உம் நாமத்தில் இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும்.

ஆமென்.

த. கர்த்தர் நம்மை ஆசீர்வதித்துக் காக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கப் பண்ணி, நம்மேல் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரசன்னமாக்கி நமக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.

ஆமென்.

நாள் 30

த. அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்;
எ. அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்.
த. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக.
எ. அல்லேலூயா.

சங்கீதம் 150 : 1, 6.

சங்கீதம் 135

பாட்டு

வேதவாசிப்பு

த. இன்று வாசித்த வேதபகுதியை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.
இரக்கமுள்ள பிதாவே, எங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றை மன்னிக்க வேண்டிக்கொள்கிறோம்.
நினைக்கத்தகாதவைகளை நினைத்ததற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. பேசத்தகாதவைகளைப் பேசினதற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. செய்யத் தகாதவைகளைச் செய்ததற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. நினைக்க வேண்டியவைகளை நினைக்காததற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. பேசவேண்டியவைகளைப் பேசாததற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. செய்யவேண்டியவைகளைச் செய்யாததற்காக,
எ. ஆண்டவரே, மன்னியும்.
த. ஆண்டவர் நாம் முன்பு இருந்த நிலையை மன்னித்து, இப்பொழுது இருக்கும் நிலையைத் திருத்த உதவி அளித்து, இனிமேல் எவ்விதம் இருக்கவேண்டுமென்று காட்டுவாராக. ஆமென்.

தேசசேவை செய்யும் எல்லாருக்காகவும் வேண்டிக் கொள்வோமாக :

★ ஜனாதிபதி, பிரதம மந்திரிக்காகவும்....................

★ கவர்னர்கள், முதல் மந்திரிகளுக்காகவும்..................

★ பாதுகாப்புப் படைகளில், போலீஸ் படையில், நெருப் பணைக்கும் படையில் உழைப்பவர்களுக்காகவும்.........

★ ராஜ்ய சபையிலும் மாகாண சபைகளிலும் அங்கத்தினர் களாயிருப்பவர்களுக்காகவும்....................

★ அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக் காகவும்....................

★ மக்களின் நிலையை உயர்த்த பாடுபடுகிறவர்களுக் காகவும்....................

★ நாங்களும் நல்ல குடிமக்களாக எங்கள் நாட்டை மேம் பாடு அடையச்செய்வதில் ஒத்துழைக்க வேண்டு மென்று எங்களுக்காகவும்.

எ. இவர்களுக்காகவும் உம் பிள்ளைகள் எல்லாருக்காகவும் நாங்கள் ஏறெடுக்கும் வேண்டுதலைக் கேட்டருளும்.

ஆமென்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

எ. தேவனே, என்ன துன்பங்கள் வந்தாலும் பாறையின் மேல் கட்டப்பட்டவை போல் எங்கள் வாழ்க்கை ஸ்திரமாய் இருக்கத்தக்கதாக உம் பரிசுத்த ஆவியின் உதவியால் உம் வார்த்தைகளை நாங்கள் செயல் படுத்த உதவிசெய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

த. தேவன் இப்பொழுதும் எப்பொழுதும் தம்முடைய நன்மைகளினால் நம்மை நிரப்புவாராக ; தம்முடைய அன்பினால் நம்மை உற்சாகப்படுத்துவாராக ; தம்மு டைய வல்லமையினால் நம்மைப் பாதுகாப்பாராக ; தம்முடைய கிருபையினால் நம்மை ஏற்றுக்கொள்வாராக.

ஆமென்.

நாள் 31

த. கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது.
எ. துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.
த. நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது.

சங்கீதம் 147 : 1, 5, 11

சங்கீதம் 139
பாட்டு
வேத வாசிப்பு

த. இன்று வாசித்த வேதபகுதியை அடிப்படையாகக் கொண்ட ஜெபம்.
எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே உம் வாழ்க்கையை வெற்றியுள்ள வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாகக் கொடுத்துள்ளீர். உம் மரணத்தாலும் உயிர்த்தெழுதலினாலும், பாவ மன்னிப்பும், தேவனை அடைவதற்கான பாதையும் நீர் கொண்டுவந்துள்ளீர். உம் பரிசுத்த ஆவியை அனுப்பினதினால் உம் பிள்ளைகளாக வாழச் சக்தி அளிக்கிறீர். இந்த மேலான நன்மைகளுக்காக உம்மைத் தொழுது ஸ்தோத்திரிக்கிறோம். உம் பரம ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம், எங்கள் வாழ்க்கையில் எங்கள் நன்றியைக் காட்ட உதவி செய்யும். ஆமென்.

(சிறிது நேரம் அமைதியாயிருத்தல்)

த. வெறுப்பு உள்ள இடத்துக்கு,
எ. நாங்கள் அன்பை எடுத்துச் செல்வோமாக.
த. சந்தேகம் உள்ள இடத்துக்கு,
எ. நாங்கள் நம்பிக்கையை எடுத்துச் செல்வோமாக.
த. இருள் உள்ள இடத்துக்கு,
எ. நாங்கள் வெளிச்சத்தை எடுத்துச் செல்வோமாக.
த. துக்கம் உள்ள இடத்துக்கு,

எ. நாங்கள் மகிழ்ச்சியை எடுத்துச் செல்வோமாக.

த. தேவனே, இயேசுகிறிஸ்து காட்டின முன்மாதிரியைப் பின்பற்றி வாழ எங்களுக்குக் கிருபை செய்யும். அவர் மூலமாய் எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும்.

ஆமென்.

த. நாம் நினைவுகூருகிறவர்களைக் கிறிஸ்துவின் ஆவி வழி நடத்தவும் ஆசீர்வதிக்கவும் வேண்டிக் கொள்வோமாக:

★ கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களை....................

★ எதிர் காலத்தைக்குறித்து தீர்மானங்கள் செய்ய வேண்டியவர்களை....................

★ பட்டினியாய் இருப்பவர், வீடு வாசல் அற்றவர், தீராத நோயினால் பீடிக்கப்பட்டவர், பிச்சையெடுப்பவர், முதலியோருக்கு உதவி செய்யப் பிரயாசப் படுகிறவர்களை....................

★ சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான பேச்சு வார்த்தை களில் ஈடுபட்டிருப்பவர்களை....................

எ. உம் பாதுகாப்புக்கு ஒப்படைக்கிறோம்.

த. கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.
தேவனே, நாங்கள் பரம பிதாவின் பிள்ளைகள் என்ப தற்கு ஏற்றாற்போலும், உயிரோடிருக்கும் இரட்சகரின் தூதுவர் என்பதற்கு ஏற்றாற் போலும்,
பரிசுத்த ஆவியின் கருவிகள் என்பதற்கு ஏற்றாற் போலும் சிந்திக்கவும், பேசவும், செயல்படவும் எங்க ளில் இன்று தங்கியிருந்தருளும்.
நீர் எங்களை வைத்திருக்கும் இடங்களில் எங்கள் வாழ்க்கை உம் வெளிச்சத்தையும் அன்பையும் ஓரளவாவது பிரதிபலிப்பனவாயும் உம் நாமத்துக்கு மகிமை கொண்டு வருபவையாயும் இருப்பதாக.

ஆமென்.

த. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

முக்கியமான நாட்களில் பள்ளிகளிலும் விருதிகளிலும் உபயோகிக்கக்கூடிய லித்தானியா

நன்றி கூறுதல்

த. ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோமாக:
இப்பள்ளியைத் (விடுதியை) தொடங்கியவர்களின் கற்பனு சக்திக்காகவும் உறுதிக்காகவும்,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. இது ஸ்திரப்படவும் இதினல் ஏற்படும் நன்மைகள் உறுதிப்படவும் எண்ணங்களினலும், ஆலோசனை களினலும், பணத்தினலும், ஜெபத்தினலும் உதவிசெய் தவர்களுக்காக,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. இங்குத் தலைமை வகித்தும், ஆசிரியர்களாயிருந்தும், வேறு பல வேலைகள் செய்தும் உழைத்தவர்களுக்காக,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. இங்கு மாணவியராயிருந்து, இப்பொழுது பல இடங் களிலும் உமக்கு சேவை செய்யப்போயிருப்பவர் களுக்காக,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. உம் அன்புக்கு சாட்சிகளாயிருக்கவும், உம் பிள்ளை களுக்குப் பயிற்றுவிக்கவும், இப் பள்ளியையும் அதிலுள்ளவர்களையும் நீர் உபயோகித்ததற்காக,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

த. கடந்த ஆண்டுகளில் நீர் எங்களுக்கு அளித்துள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், இப்பொழுது கொடுத் திருக்கும் எல்லா நல்ல வாய்ப்புகளுக்காகவும், இனி வரும் காலத்தில் உமக்கென்று சிறந்த விதமாய் உழைப் பதற்கான உம் அழைப்புக்காகவும்,

எ. ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

மன்ருட்டு

த. ஆண்டவரை வேண்டிக்கொள்வோமாக :—
எங்கள் பள்ளிக்கு நன்மை செய்பவர்கள், எங்கள் நண்பர்களுக்காக,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. இங்கு உழைத்துப்போனவர்களும் படித்துப்போனவர்களும் உமக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து உம்முடைய ஆசீர்வாதங்களைப் பூரணமாய்ப்பெற,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. இப்பொழுது இங்கு ஆசிரியர்களாயிருப்பவர்களும், மாணவிகளாயிருப்பவர்களும் வேறு வேலைகள் செய்பவர்களும் நல்ல பாரம்பரியத்தை நிலைநிறுத்தி, அன்பு, உண்மை, சேவை என்னும் அஸ்திபாரங்கள் மேல் கட்டப்பட்ட சமூகத்தை உருவாக்க,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. பள்ளியின் நிர்வாகப் பொறுப்பு உள்ளவர்கள் உம் சித்தத்துக்கும், சபையின் சேவைக்கும் ஏற்றவைகளையே செய்வதற்கு வழிநடத்தப்பட,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. கல்லூரிகளிலும் பயிற்சிப் பள்ளிகளிலும், பள்ளிகளிலும் உழைப்பவர்கள் உயர்ந்த நோக்கமுள்ளவர்களாய் வாலிபர், சிறுவர் சேவைக்குத் தங்களைத் தத்தம்செய்ய ஆயத்தமாயிருக்க,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

த. அரசாங்கக் கல்வி இலாகாவிலுள்ளவர்கள் உண்மையும் சேவையின் உயர்ந்த இலட்சியங்களும் உடையவர்களாய், வாலிபர், சிறுவருக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டும் திட்டங்களை வகுக்க உம்மால் வழிநடத்தப்பட,
ஆண்டவரே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

எ. எங்கள் விண்ணப்பம் உம்மண்டை சேர்வதாக.

எல்லா நன்மையான ஈவுகளுக்கும் காரணரான சர்வவல்லமையுள்ள தேவனே, இப்பள்ளி (விடுதி)யின் மேல் உம்முடைய ஆசீர்வாதங்களைத் தொடர்ந்து பொழிந்தருள வேண்டிக்கொள்கிறோம். இது உம்மால் ஆசீர்வதிக்கப்பட்ட இடமாகவும், உண்மையுள்ளவைகளும், ஒழுக்கமுள்ளவைகளும், அழகுள்ளவைகளும், நற்சாட்சியுள்ளவைகளும் வளர்ந்து செழிக்கும் இடமாகவும் இருக்கச் செய்யும். இதன் பெயர் மாசு மறுவற்று விளங்கவும், இது பலருக்குப் பிரயோஜனமாயிருக்கவும், இதை உம் மகிமை விளங்கும் கருவியாக யாவரும் நேசிக்கவும் உதவிசெய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

சில முக்கியமான சம்பவங்களுக்கான ஜெபங்கள்

குழந்தை பிறந்ததற்காக

பரம பிதாவே, உயிர் அளிப்பவரே, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து பெத்லகேமில் சிறு குழந்தையாகப் பிறந்தார். இப்பொழுதும் உம்முடைய ஈவாகிய இக்குழந்தைக்காக நன்றி செலுத்துகிறோம். பேறு காலத்துக்குரிய எல்லா ஆபத்துகளிலிருந்தும் இந்தத் தாயைக் காப்பாற்றிய உம் கவலைக்காகவும், அன்புக்காகவும் இக்குழந்தை பிறந்ததினால் நாங்கள் அடைந்துள்ள மகிழ்ச்சிக்காகவும் நன்றி.

இப்பிள்ளையைச் சரியாகப் பயிற்றுவித்து, உம்மை அறியும் அறிவிலும் உம்மை நேசிக்கும் அன்பிலும் வளர்க்க இந்தப் பெற்றோருக்கும், இக்குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் உம் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யும்.

இக்குழந்தையின் மூலமாக நீர் எங்களுக்கு அளித்துள்ள ஈவைப்பெற நாங்கள் தகுதியுள்ளவர்களாயிருப்போமாக. எங்கள் முன்மாதிரியினாலும், வேண்டுதல்களினாலும் இவன் (இவள்) வளர்வதில் நாங்களும் பங்குள்ளவர்களாயிருப்போமாக. நாங்கள் செய்தவை அல்லது செய்யாதவைகளினால் இவன் (இவள்) குற்றம் செய்ய நாங்கள் காரணமாயிராதபடிக் காத்தருளும். தன் நாமத்தினாலே ஒரு சிறு பிள்ளையை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், தன்னை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று வாக்களித்த இயேசுகிறிஸ்துவின், மூலம் இந்த ஜெபத்தைக் கேட்டருளும். ஆமென்.

பிறந்த நாளுக்காக

பரம பிதாவே, ...குக் கடந்த ஆண்டில் நீர் அளித்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம் இனி வரும் ஆண்டுகளிலும் உம்முடைய ஆசீர்வாதங்களைப் பொழிந்தருள வேண்டிக் கொள்ளுகிறோம். இவன் (இவள்) எப்பொழுதும் உம்மைப்பற்றி அக்கறையுள்ளவனாயிருந்து உம்மைப் பற்றிய அறிவிலும் உம்மை நேசிக்கும் அன்பிலும் வளருவானாக. எல்லாவற்றையும் உம் சித்தத்திற்கு ஏற்ப செய்து, நீர் கொடுக்கும் காலமளவும் உம் நாமத்துக்கு மகிமை கொண்டுவருகிறவனாய் வாழ்ந்து, கடைசியாக நாங்களும் இவனும் உம்முடைய நித்திய ராஜ்யத்தை அடைவோமாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இந்த ஜெபத்தைக் கேட்டருளும்.

ஆமென்.

திருமணத்திற்காக

எங்கள் பரம பிதாவாகிய தேவனே, ஆணும் பெண்ணும் பரிசுத்த விவாகத்தினால் ஒன்று சேர்க்கப்பட்டு வாழ வேண்டுமென்று நியமித்தவரே,............... மேலும்.............மேலும் உம்முடைய ஆசீர்வாதத்தை அருளிச்செய்ய வேண்டிக்கொள்ளுகிறோம். இவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுக்கும்போது அவை உம்முடைய சந்நிதியில் கொடுக்கப்படும் வாக்குகள் என்று நினைவுகூரச்செய்யும்; எப்பொழுதும் அவற்றின்படி நடக்கக் கிருபையளியும்.

சுகத்திலும் துக்கத்திலும், வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், உம் பரிசுத்த ஆவியின் உதவியை அளித்தருளும். இவர்கள் ஒருமித்த வாழ்க்கையின் எல்லா அனுபவங்களிலும் ஒருவர்மேல் ஒருவருக்குள்ள அன்பு அதிகமாவதாக. இவர்கள் வீடு நீர் எப்பொழுதும் மகிமைப்படுத்தப்படும் இடமாயிருப்பதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். ஆமென்.

வியாதியாயிருக்கும்போது

இயேசுகிறிஸ்துவே, வியாதியஸ்தரைச் சுகப்படுத்தி, குறைவிலிருந்தவர்களுக்காகக் கவலைப்பட்டவரே, உம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தேவையானவைகளை அளித்துள்ளவரே, ...ஐ உம்முடைய பராமரிப்புக்கு ஒப்புக்கொடுக்கிறோம். நோயுற்றிருக்கும் இச்சமயத்தில் இவன் (இவள்), நீர்கூட இருக்கிறீர் என்றும், சுகம் கொடுக்க வல்லவர் என்றும் உணரச் செய்யும்; எல்லாக் கவலைகளும் பயங்களும் ஓடிப்போகவும் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அடையவும் தன்னை உம்மிடம் ஒப்படைக்க ஏவியருளும். உம் தைரியத்தின் ஆவியையும் சகிக்கும் தன்மையையும் அளித்தருளும்.

இவனுக்கும், வியாதியாயிருக்கும் மற்றவர்களுக்கும் சிகிச்சை செய்பவர்களுக்கு வேண்டிய திறமையை அளித்து, சுகம் கொடுக்கும் உம் நோக்கத்தை நிறைவேற்ற அவர்கள் சேவையையும் எங்கள் வேண்டுதல்களையும் ஏற்றுக்கொண்டருளும். உம் நாமத்துக்கு எல்லா மேன்மையும் மகிமையும் உண்டாவதாக.

ஆமென்.

மரணம் நேரிடும்போது

தேவனே, உம் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினதின் மூலம் உண்மையான விசுவாசத்தையும், நிச்சயமான நம்பிக்கையையும் கொடுத்துள்ளவரே ......ஆவியை உம் அன்பான கரங்களில் ஒப்படைக்கிறோம்............ க்கு உம்முடைய சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் அருளிச்செய்யும் இவன் முடிவில்லாத உம் மகிழ்ச்சியின் நிறைவை அடைய உதவிசெய்யும்.

துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் எங்களை உம் பிரசன்னத்தின் நிச்சயத்தினாலும், மரணத்தின் மேல் நீர் பெற்ற வெற்றியினாலும் ஆறுதல்படுத்தும். இந்த துக்கத்திலிருந்து நாங்கள் உயர்த்தப்பட்டுப் பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலும், பாவ மன்னிப்பிலும், சரீரம் உயிர்த்தெழுதலிலும், நித்திய ஜீவனிலும் நம்பிக்கை உள்ளவர்களாக வாழக் கிருபை செய்யும். உயிரோடிருக்கும் எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

உணவுக்கு நன்றி செலுத்துதல்

1. இந்த நல் ஆகாரத்தைத் தந்த தேவ தயவை நன்றியோடு நினைப்போம், என்றும் உம்மைச் சேவிப்போம். ஆமென்.

2. தந்தையே, இந்தப் போஜனம்தனைத் தந்ததற்கெங்கள் வந்தனம், இந்த வேளையும்வந்து நின்னருள் தந்து நற்பெலன் தாருமே. ஆமென்.

3. கோடானுகோடி ஈவுகள் அளித்த அன்பின் பிதாவே, நன்றி அறியும் இதயம் அளித்துப் பூரணராக்கும் ஆமென்.

4. அன்னம், ஆடை அளித்துள்ள அமலனை இன்றும், என்றும் போற்றிடுவோம். ஆமென்.

5. ஊணும், உடையும் உவந்தளிக்கும் எந்தையாம் இறைவன்தனை, சுகமும் பலமும் நிதம் தரவே அடிபணிந்து இறைஞ்சிடுவோம். ஆமென்.

6 அன்போடு இந்த நேரத்தில் அன்ன ஆகாரம் கொடுத்தீர், தேவா, அருள்புரிவாய் என்றும் உம்மைத் துதிப்போம். ஆமென்.

7. அழகிய வீடும், அருமை நண்பரும், ஆதரித்திடுவோரும், அருந்திட உணவும் அளித்திட்ட தேவா, அன்புடன் ஸ்தோத்திரிப்போம். ஆமென்.

8. நல் ஈவுகள் யாவும் ஈபவர் கர்த்தரே; துதிப்போம் என்றும் துதிப்போம் அவர் மா அன்பையே. ஆமென்.